பக்கங்கள் : பத்து

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 புரட்டாதி 26 சனிக்கிழமை (13.10.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 317



யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகைதந்த ஐ.நா.வின் மனித உரிமைகளுக்கான ஆணையாளர் லூயிஸ் ஆர்பர் அம்மையார் ஆயர் இல்லத்தில் வைத்து கன்னியாஸ்திரி ஒருவரால் பொட்டு அணிந்து வரவேற்கப்படுவதையும், யாழ். ஆயர் அதிவண தோமஸ் சௌந்தரநாயகம் கைலாகு கொடுத்து வரவேற்பதையும் முதலிரு படங்களில் காணலாம். பெரிய கோயிலில் பாதிக்கப்பட்ட மக்களை ஆர்பர் அம்மையார் சந்தித்து ஆறுதல் கூறுவதை அடுத்த படத்தில் காணலாம். (மற்றும் படங்கள் 03ஆம் பக்கத்தில்)

### ஐ.நா. மனித உரிமையாளர் ஆர்பர் அம்மையாரை

# பத்துமணி நேரம் காத்திருந்து களைத்தும்

# சந்திக்க முடியாமல் ஏமாந்த யாழ். மக்கள்!

## வீதியில் நிற்கவிடாமல் விரட்டினர் படையினர்

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 13

கொளுத்தும் வெயிலையும் பொருட்படுத்தாது பத்து மணித்தியாலங்களுக்கும் மேலாக காத்திருந்து களைத்தும், கோயில் வீதியில் உள்ள அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தின் (யு.என்.எச்.சி. ஆர்) முன்னாலும், பின்னர் அருகில் உள்ள ஒழுங்கைகளிலும் திரண்ட நூற்றுக்கணக்கான மக்கள் -

ஐ.நா. மனித உரிமைகளுக்கான ஆணையாளர் லூயிஸ் ஆர்பர் அம்மையாரைச் சந்திக்க முடியாமல் ஏமாற்றத்துடன் திரும்பினர்.

தமது உறவுகள் கடத்தப்பட்டும், காணாமற்போயும், படுகொலை செய்யப்படும் துயரில் மூழ்கித் தவிக்கும் மக்கள், தம் ஏக்கங்களையும், கவலைகளையும் ஆர்பர் அம்மையாரிடம் வெளியிட முடியும் என்ற நம்பிக்கையுடனும் ஆதங்கத்துடனும் நேற்றுக்காலையிலேயே யு.என்.எச்.சி.ஆர். அலுவலகத்தின் முன்னால் திரண்டனர். வயதானவர்கள், பிள்ளைகளுடன் அன்னையர்கள், குழந்தைகளுடன் இளம் தாய்மார்கள் என்று பல ரகத்தினரும் அங்கு கூடினர்.

ஆனால் ஐ.நா. ஆணையாளரைச் சந்தித்து தமது வேண்டுதல்களை, சோகத்தை அவருடன் பங்கிட்டுக்கொள்ள முடியாது சுமார் பத்து மணிநேரத்தின்பின் ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர்.

சுமார் ஐநூறுக்கும் அதிகமான மக்கள் நேற்றுக்காலை 8 மணியளவிலேயே யு.என்.எச். சி.ஆர் அலுவலகம் முன் கூடினர்.

(10ஆம் பக்கம் பார்க்க)

## நேரில் செய்தி சேகரிப்பதற்கு ஊடகவியலாளருக்குத் தடை!

யாழ்ப்பாணம், ஒக். 13

யாழ்ப்பாணத்துக்கு நேற்று விஜயம் தந்த ஐ.நாவின் மனித உரிமைகளுக்கான ஆணையாளர் லூயிஸ் ஆர்பர் அம்மையாரின் நிகழ்வுகள் தொடர்பான செய்திகளை நேரில் திரட்டுவதற்கு ஊடகவியலாளர் தடுக்கப்பட்டனர். அதுமட்டுமன்றி பெரும் இடர்பாடுகளையும் நெருக்கடிகளையும் எதிர்நோக்கினர்.

முக்கிய சந்திப்புக்கள் இடம்பெற்ற ஆயர் இல்லத்துக்கு சென்று செய்திகளை திரட்டவோ புகைப்படம் எடுக்கவோ விடாது ஊடகவியலாளர்களை படையினர் தடுத்தனர்; மிரட்டினர்; அங்கிருந்து செல்லுமாறு உத்தரவிட்டனர். (10ஆம் பக்கம் பார்க்க)

# குடாநாட்டில் வழமைநிலை திரும்புவதற்கு ஏ-9 பாதையைத் திறப்பதே ஒரே மார்க்கம்

### பிரசைகள் பிரமுகர்கள் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஒக். 13

குடாநாட்டின் பொருளாதார நிலைமை மற்றும் மனித உரிமை விடயம் ஆகியன மிகவும் மோசமடைந்தது, ஏ-9 பாதை மூடப்பட்ட பின்னர்தான். மீண்டும் குடாநாடு வழமை நிலைக்கு திரும்புவதற்கு ஏ-9 பாதையைத் திறப்பதே ஒரே மார்க்கமாகும்.

யாழ். வந்த ஐ.நாவின் மனித உரிமைகளுக்கான ஆணையாளர் லூயிஸ் ஆர்பரிடம் மேற்கண்டவாறு எடுத்துரைக்கப்பட்டது.

யாழ். ஆயர் இல்லத்தில் நேற்று நண்பகல் 12.30 மணிக்கு யாழ். பிரசைகளின் பிரமுகர்கள் ஐ.நா. ஆணையாளரைச் சந்தித்துப்

(10ஆம் பக்கம் பார்க்க)

### முன்னரங்கப் பகுதியில் மோதல்கள் தொடர்கின்றன

கொழும்பு, ஒக்.13

முகமாலை மற்றும் நாகர்கோயில் ஆகிய பகுதிகளிலுள்ள படையினரின் முன்னரங்க நிலையில் நேற்று முன்தினம் விடுதலைப்புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் இடம்பெற்றதாக தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலையம் தெரிவித் திருக்கின்றது.

அந்தப் பகுதிகளுக்குள் விடுதலைப் புலிகளின் அணி ஒன்று ஊடுருவித் தாக்குதல் தொடுக்க முற்பட்ட வேளையிலேயே

(10ஆம் பக்கம் பார்க்க)

# மனித உரிமை மீறல்களைக் கண்காணிப்பதற்கு ஐ.நா. இங்கு பிரசன்னமாகிச் செயற்பட வேண்டும்

### மக்கள் குழு ஆர்பரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 13

குடாநாட்டில் வரம்பின்றி படுகொலைகள், ஆள்கடத்தல்கள், காணாமற்போதல், ஆகிய மனித உரிமை மீறல்கள் கட்டுப்படுத்துவார் எவருமின்றி உச்ச நிலைக்குச் சென்று கொண்டிருக்கின்றன. அவற்றைக் கண்காணித்துக் கட்டுப்படுத்த, ஐ.நா. இங்கு பிரசன்னமாகிச் செயற்படவேண்டும்.

இவ்வாறு சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழு நேற்று இங்கு விஜயம் செய்த ஐ.நாவின் மனித உரிமைகளுக்கான ஆணையாளர் லூயிஸ் ஆர்பர் அம்மையாரிடம் வலியுறுத்தியது.

யாழ். ஆயர் இல்லத்தில் நேற்று முற்பகல் 11.20 மணிக்கு மக்கள் குழுவின் பிரதிநிதிகளை ஆர்பர் அம்மையார் சந்தித்தார்.

மக்கள் குழுவின் சார்பில் போசகர்களான நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாச்சார்ய சுவாமிகள், யாழ். ஆயர் அதிவண தோமஸ் சௌந்தரநாயகம், தலைவர் வாழ்நாள் பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை, செயலாளர் எஸ். பரமநாதன், அருட்கலாநிதிகள் யஸ்ரின் ஞானப்பிரகாசம், பி. நேசகுமார், எஸ். கதிர்காமர், ஜெ. ஜெயக்

(10ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## சேவை நலன் பாராட்டு



இன்று 13/10/2007 சேவைநலன் நயந்து பாராட்டுப் பெறும் எமது பாடசாலையின் முன்னாள் அதிபரும், இன்றைய கோட்டக்கல்விப் பணிப்பாளருமாகிய

திருமதி **வசந்திமாலா சிவபாலன்**,
அவர்கள் மென்மேலும் சிறப்புற்று வாழ வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், பழையமாணவர்கள்,
பா.அ.சங்கம், நலன்விரும்பிகள்,
யா/கொழும்புத்துறை இந்து.ம.வி.

(சி/53953)

## யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்(வ-து)
## பிளாஸ்ரிக் வெற்றுக்கான் கூறுவிலை கோரல்

05 லீற்றர் பிளாஸ்ரிக் வெற்றுக் கொள்கலன்கள் உள்ளன. இதற்கான கூறுவிலை கோரப்படுகின்றது. கூறுவிலை விண்ணப்பங்கள் 19.10.2007 ஆம் திகதிக்கு முன்னதாக

பொதுமுகாமையாளர்,
யாழ்ப்பாணம் பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் (வ.து)
127, கே.கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு கூறுவிலை விண்ணப்பம் என கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் எழுதப்பட்டு நேரிலோ அல்லது தபால் மூலமோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

பொதுமுகாமையாளர்,
யாழ்ப்பாணம் பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் (வ.து)
12.10.2007 (சி/53963)

## பொதுக்கூட்டம்

தெல்லிப்பளை மேற்கு விழிசிட்டி அருள் மிகு வீரபத்திர சுவாமி கோயில் பொதுக் கூட்டம் 2007-10-14 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இதில் எமது ஆலய அடியார்கள் அனைவரையும் பங்குபற்றுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

நிர்வாகம்

(66898)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை
### வெளிவாரப்பட்டப் பதிவுகள் பரீட்சை அலகு
### வெளிவாரிப் பரீட்சை-2006

பொதுக்கலைமாணித் தேர்வு பகுதி- II - 2003 (வெளிவாரி)
செய்முறைப் பரீட்சை(EX.DTAG 3.2) நாடகமும் அரங்கியலும்
மேற்படி தேர்வுக்கான செய்முறைப் பரீட்சையை 26.10.2007 மற்றும் 27.10.2007 ஆகிய திகதிகளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள கைலாசபதி கலையரங்கில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பரீட்சார்த்திகள், பரீட்சை தொடர்பாக ஏற்கனவே எம்மால் வழங்கப்பட்ட பரீட்சை அனுமதி அட்டையுடன் சமூகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுவதுடன், செய்முறைப்பரீட்சை தொடர்பான நேர அட்டவணைகளை வெளிவாரிப்பட்ட பதிவுகள் பரீட்சைகள் அலகுடன் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளலாம்.

**முக்கிய குறிப்பு:-** செய்முறைப்பரீட்சை முடிவடைந்ததும். பரீட்சை அனுமதி அட்டையை வெளிவாரிப்பட்ட பதிவுகள் பரீட்சைகள் அலகில் தவறாது ஒப்படைக்கும் படிகேட்டு கொள்ளப்படுகின்றீர்கள்.

**பதிவாளர்**
**12.10.2007**

(சி/53963)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
### கலைப்பீடப் பரீட்சைகள் - 2006

கலைப்பீடத்தின் கல்வியாண்டு 2005-2006க்கான முதலாம், இரண்டாம் அரையாண்டுப் பரீட்சைகள் பின்வரும் ஒழுங்கில் நடைபெறவுள்ளன.

01. இரண்டாம் அரையாண்டு பரீட்சைகள்

| | |
|---|---|
| a. நான்காம் வருட (கலை) பரீட்சைகள் | 05.11.2007 |
| b. இரண்டாம், மூன்றாம் வருட (கலை) பரீட்சைகள் | 12.11.2007 |
| c. முதலாம் வருட (கலை) பரீட்சைகள் | 26.11.2007 |
| d. நுண்கலைமாணிப் பரீட்சைகள்(செய்முறை) | |
| இசை | 26.10.2007 |
| நடனம் | 29.10.2007 |
| சித்திரமும் வடிவமைப்பும் | 05.11.2007 |
| e. நுண்கலைமாணிப் பரீட்சைகள்(அறிமுறை) | 26.11.2007 |
| f. ஆய்வுக்கட்டுரை சமர்ப்பிக்க வேண்டியஇறுதித்திகதி | 14.12.2007 |

02. முதலாம் அரையாண்டு பரீட்சைகள்

| | |
|---|---|
| a. மூன்றாம், நான்காம் வருட(கலை) பரீட்சைகள் | 17.12.2007 |
| b. முதலாம் இரண்டாம் வருட(கலை)பரீட்சைகள் | 31.12.2007 |
| c. நுண்கலைமாணிப் பரீட்சைகள்(அறிமுறை) | 10.12.2007 |

03. மீள்பரீட்சைகள் (அரையாண்டு நிகழ்ச்சித்திட்டம்)
1ஆம், 2ஆம், 3ஆம் வருட முதலாம், இரண்டாம் அரையாண்டு மீள் பரீட்சைகள் யாவும் 21.01.2008 ஆம் திகதியிலிருந்து நடைபெறும்.

★ இரண்டாம் அரையாண்டு பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் யாவும் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 17.10.2007

★ முதலாம், இரண்டாம், மூன்றாம் வருடத்தின் முதலாம், இரண்டாம் அரையாண்டுப் பரீட்சைகளுக்கான மீள்பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்கள் யாவும் 30.11.2007 வரை பீடாதிபதி அலுவலகத்தால் ஏற்றுக்கொள்ளப்படும்.

★ முதலாம், இரண்டாம் அரையாண்டு விரிவுரைகளுக்கு சமுகம் அளிக்க முடியாத மாணவர்கள் தமது கற்றல் செயற்பாடுகளைப் பூர்த்தி செய்யும் முகமாக 21.01.2008 திகதிலிருந்து விரிவுரைகள் நடத்துவதற்கு விசேட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**பதிவாளர்**
**11.10.2007**

## இலங்கை வங்கி இன்று இயங்காது

யாழ்ப்பாணம், ஒக். 13

இலங்கை வங்கியின் யாழ். கிளை யின் வங்கிச்சேவை ரம்ழான்தினத்தை முன்னிட்டு இன்று சனிக்கிழமை நடை பெறமாட்டாது என வங்கியின் வட பிராந்திய பதில் செயற்பாட்டு முகாமையாளர் தெரிவித்தார்.

(202)

## ஆங்கில தினப் போட்டிக்கு செவ்வாய் செல்ல ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஒக். 13

மாகாண் மட்ட ஆங்கில தினப் போட்டிக்காக யாழ்.மாவட்டத்தி லிருந்து வவுனியா செல்லவுள்ள ஆசிரியர், மாணவர்களுக்கான பயண ஒழுங்குகள் எதிர்வரும் செவ்வாய்க் கிழமைக்கு யாழ். செயலகத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளனஎன்று யாழ். அரசஅதிபர் அறிவித்துள்ளார். (202)

## உடுப்பிட்டியில் சடலம் மீட்பு

உடுப்பிட்டி, ஒக். 13

உடுப்பிட்டி - தொண்டைமானாறு வீதியில் பொக்கணைச் சந்தியில் கத்திக் குத்துக்காயத்துடன் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் நேற்றுக்காலை மீட்கப் பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மாலை தமது வீட்டை விட்டுச் சென்ற இவர் நேற்றுக் காலை அவரது வீட்டுக்கு அருகில் சடலமாக மீட்கப் பட்டுள்ளார்.

அதே இடத்தைச் சேர்ந்த முத்தன் இராசன் (வயது - 56) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார். (அ-1-155)

## இன்றும் நாளையும்

சங்கானை, ஒக். 13

சங்கானை சிலம்புப் புளியடி இந்து இளைஞர் மன்றத்தால் தரம் 6 தொடக்கம் 11 வரையான மாணவர்களுக்கு இன்று காலை 9 மணிக்கு மன்றத்தின் சிறுவர் பாடசாலைக்கட்டடத்தில் சைவ சமய அறிவுப் போட்டி நடத்தப்படவுள்ளது. (203)

* * *

யாழ்ப்பாணம், ஒக்.13

''சொண்ட்'' அரச சார்பற்ற நிறுவனத்தின் ஏற்பாட்டில் சாவகச்சேரிப் பிரதேச சிறுவர் கழகங்கள் இணைந்து நடத்தும் சிறுவர் தின விழா இன்று காலை 9.30 மணிக்கு மீசாலை விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விக்கு சிறப்பு விருந்தினராக சாவகச்சேரிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் கலந்துகொள்ளவார்.

இதேவேளை:-

நல்லூர்பிரதேசசிறுவர்கழகங்கள்இணைந்து நடத்தும் 'சொண்ட்' நிறுவன ஏற்பாட்டிலான சிறுவர் தின நிகழ்வு இன்று பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் சிறப்பு விருந்திராக நல்லூர் பிரதேச சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தர் கலந்துகொள்வார். (202)

* * *

யாழ்ப்பாணம், ஒக்.13

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் தேசிய ரீதியில் தமிழ்மொழியில் இரண்டாம் இடத்தையும் மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தையும் பெற்ற ம.மதுஷனையும் நாவாந்துறைப் பிரதேசத்தில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற ஏனைய மாணவர்களையும் பாராட்டும் நிகழ்வு ஒன்றை நாவாந்துறை சென் மேரிஸ் சனசமூக நிலையத்தினர் ஏற்பாடு செய்துள்ளனர்.

இந்நிகழ்வு இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நாவாந்துறை பரலோக அன்னை ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது. (202)

* * *

யாழ். கல்விவலயத்துக்குட்பட்ட பாடசாலை மாணவர்களிடையிலான சைவ நெறிப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்.இந்துக்கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய் ஆகியகோட்டங்களைச் சேர்ந்த 327 மாணவர்கள் இப்போட்டியில் பங்கு பற்றுகின்றனர்.(1)

* * *

இலங்கை செஞ்சிலுவைச்சங்க மாவட்டக்கிளையின் செஞ்சிலுவைச் சங்க செயற்பாடுகள் தொடர்பான பரப்புரைக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப 3 மணிக்கு உரும்பிராய் கிழக்கு காந்திஜீ சன சமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இப்பரப்புரைக்கூட்டத்தில் மாவட்டக் கிளையின் தலைவர் பேராசிரியர் வீ.கே. கணேசலிங்கம், கிளையின் பரப்புரை உத்தியோகத்தர் இ.மயில்வாகனம் ஆகியோர் கலந்து கொண்டு பரப்புரை நிகழ்த்துவர். (1)

## முதலாம் ஆண்டு நினைவலையில்



ஆண்டவன் படைப்பில்
24 ★ 10 ★ 1972

அன்னியர் அழிப்பில்
13 ★ 10 ★ 2006

### அமரர் முருகேசு நாகசிறி (சிறி)

கள்ளகத்து இல்லா உந்தன் கனி முகம்
அன்னியர் அழிப்பினால் வாடும் என்று
கனவிலும் நாம் கண்டதில்லை

கதிரவன் போல் நீ கண் விழித்து
கடமையில் நீ இருந்த நேரம்
காளை அவன் கருமேகம் போல்
உனை மறைத்துச் சென்றதுமேன்

பஞ்சிற்படு தீ போல் பற்றி எரிகிறது மனம்
பக்கத்தில் இருந்தால் பார்த்து ஆறிடலாம்
அன்னியர் அழிப்பில் நீ அக்கினியில் சங்கமித்தாய்
சிறி நீ எமக்கில்லையென எண்ணுகையில்
சித்தப் பிரமையில் சிதைகின்றது எம் இதயம்

உன் உடம்பு அக்கினியில் சங்கமித்து
ஆண்டு ஒன்று போனாலும்
உன் உயிர் என்றும் எங்கள்
உயிருடன் சங்கமித்துள்ளது.

நிலையில்லா இவ்வுலகில் நிலைத்து விட்ட உன்
அன்பால் யாவருக்கும் இனியவனாய் வாழ்ந்து
எம்மை விட்டு பிரிந்து ஆண்டொன்று சென்றாலும்
நினைவிழக்க முடியாமல் நாம் நீந்துகின்றோம் கண்ணீர்க கடலில்

உன் ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திக்கும்

கோயில் வீதி, யாழ்ப்பாணம். (66903) - **குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்கள்



### வெற்றிவேலு இராஜேந்திரா

செம்பாடு, கரணவாய் மத்தி, கரவெட்டியைச் சேர்ந்த வெற்றிவேலு இராஜேந்திரா நேற்று (12.10.2007) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வெற்றிவேலு - செல்லம்மா தம்பதிகளின் மகனும், தியாகராசா - சரஸ்வதி தம்பதிகளின் மருமகனும், உமாவதியின் அன்புக்கணவரும், தர்மிகா,கரிஷன் ஆகியோரின் தந்தையும், காலஞ்சென்ற பரஞ்சோதி, சிவபாதசுந்தரம், தியாகராசா (கனடா) ஆகியோரின் சகோதரனும், பத்மாவதி (கனடா), பாலச்சந்திரன் (கனடா), பாலகிருஷ்ணன் (கனடா) ஆகியோரின் மைத்துனரும், உதயச் சந்திரிகா(கனடா), மோகன்றாஜ் (கனடா) ஆகியோரின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.10.2007) சனிக்கிழமை நடைபெற்று பூதவுடல் எள்ளங்குளம் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

செம்பாடு,
கரணவாய் மத்தி,
கரவெட்டி. தொ.பே:- 021-226-4320

தகவல்:-
உமாவதி (மனைவி) (66902)



### குருசுமுத்து மாசிலாமணி

ஊர்காவற்துறையை பிறப்பிடமாகவும், சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட குருசுமுத்து மாசிலாமணி (11.10.2007) வியாழக்கிழமை கண்டி கட்டுகஸ்தோட்டையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மனோன் மணியின் அன்புக்கணவரும், உதயகுமார்(நியூசிலாந்து). சாந்தகுமார்(நிர்மாணப் பொறியியலாளர், ▯▯▯,யாழ்ப்பாணம்), பவானி(ஆசிரியை, யாழ்.செம் ஜேம்ஸ் ம.வி), சுதாஜினி(கண்டி) ஆகியோரின் அன்புத்தந்தையும் கிருஷாந்தி, ஹேமலதா(ஆசிரியை, சண்டிலிப்பாய் இந்து கல்லூரி), டேவிற், ஜெயச்சந்திரன்(DCSL உதவி உற்பத்தி முகாமையாளர், கண்டி) ஆகியோரின் அன்பு மாமனும் தேம்பாமலர், யேசுதாசன், ஜோசப், இந்துராணி ஆகியோரின் அன்புச் சகோதரரும். கிளாக், மதுஷாயினி, செந்தூரன், நேச்சல், நேதிகா, சரன், கபிஷேக், அபிலாஷ், ஹரிஸ்மன் ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை(14.10.2007) ஞாயிற்றுக்கிழமை கண்டி கட்டுகஸ் தோட்டையில் உள்ள அவரது மகளின் இல்லத்தில் நடைபெறும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கல்லூரி வீதி
சண்டிலிப்பாய் (66906)

தகவல்
**மா.சாந்தகுமார்** (மகன்)



### பெர்ணான்டோ ஜெகநாதன்(சாள்ஸ்)

உடுவிலைப் பிறப்பிடமாகவும் கொழும்பு மாளிகாவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட பெர்ணான்டோ ஜெகநாதன்(சாள்ஸ்) 09.10.2007 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலம்சென்ற பெர்ணான்டோ மற்றும் கண்மணி தம்பதியினரின் அன்பு மகனும், காலம்சென்ற தேவசகாயம் மற்றும் நேசம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், வேணடேத்தின் அன்புக் கணவரும், வேளினா, சாளினா, கெறெஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும், எட வேட்றதி(கொழும்பு), ஜெயராசா செல்வலோஜினி(குஞ்சு-கனடா), கமலநாதன் ஜெசிந்தலோஜினி(வவா-கனடா), கிளஸ்ரர் பத்மலோஜினி(கொழும்பு), எட்மன்(றெஜி), சாள்ஸ் மடோனா(கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், பெனடிக், பேணாட், அல்பிறட் பெர்ணதேத், வேக்மன் ஆகியோரின் மைத்துணரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று(13.10.2007) சனிக்கிழமை கொழும்பில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நணபர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மல்வம்,உடுவில் (66895)

தகவல்
**சி.அல்பிறட்** (சகலன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவின் தூதுவரின் யாழ். விஜயத்தின் போது....





யாழ்ப்பாணம் வந்த ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகளுக்கான தூதுவர் லூயி ஆர்பர் அம்மையாரைக் கண்டு தமது கதிகுறித்து நேரில் கூறுவதற்கு யு.என்.எச்.சி. ஆர் அலுவலகத்துக்கு முன்னால் திரண்ட பாதிக்கப்பட்ட மக்களில் ஒரு பகுதியினரும், வீதியில் நிற்கக் கூடாது என்று படையினர் விரட்டியதால் அருகில் உள்ள ஒழுங்கைக்குச் சென்று ஆர்பரின் வருகையை எதிர்பார்த்துக் கண்பூத்துப் போன இன்னொரு சாராரும் படங்களில் காணப்படுகின்றனர்.





யாழ். ஆயர் இல்லத்துக்கு வருகை தந்த ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளுக்கான தூதுவர் ஆர்பர் அம்மையாரை ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் வரவேற்று அழைத்துச் செல்கிறார்.

சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான தூதுக்குழுவுடன் சந்திப்பு நடைபெற்றபோது....

நல்லை ஆதீன முதல்வர், ஆயர் ஆகிய இருவருடனும்.....

ஆர்பர் அம்மையாரை சந்தித்து தமது துயர் தீர்க்கக் கோருவதற்காக மரியன்னை பேராலயத்தில் காத்திருந்த பாதிக்கப்பட்ட மக்களை சந்திப்பதற்காக அதிகாரிகள் சகிதம் செல்லும் போது ....

அம்மையாரைக் கண்டு தமது கதை கூறக்காத்திருந்த பாதிக்கப்பட்டவர்களில் மற்றொரு பகுதியினர்..





# மைதானத்தில் தவறிழைக்கும் வீரர்களுக்கு மத்தியஸ்தர்களின் எச்சரிக்கை அவசியம்; அதனால் விளையாட்டு விதிகள் பேணப்படும்!

யாழ். குடாநாட்டில் இடம்பெறும் விளையாட்டு நிகழ்வுகளில் நடுவர்கள், மத்தியஸ்தர்கள் ஆகியோரின் கவலையீனங்கள் விளையாட்டு வீரர்களைப் பாதித்து வருகின்றன.

விளையாட்டுப் போட்டிகளில் சட்ட திட்டங்களை உறிய முறையில் செயல்படுத்தாது விடும் தவறுகள் வீரர்கள் தென்பகுதிப் போட்டிகளுக்குச் சென்று விளையாடும் சந்தர்ப்பங்களில் அவர்களுக்குப் பெரும் நெருக்கடிகளை உண்டாக்கியுள்ளமையை கடந்த காலத் தில் தென்பகுதிக்குச் சென்று திரும்பிய விளையாட்டு அணிகளின் வீரர்கள் மூலம் தெரிய வருகின்றது.

அண்மையில் வடக்கு மாகாணம் உதைபந்தாட்டப் போட்டியில் விளையாடச் சென்ற யாழ். மாவட்ட உதைபந்தாட்ட அணியினர் மைதானத்தில் மத்தியஸ்த்தர்களுடன் கதைக்க முற்பட்டு மஞ்சள் அட்டை காட்டப்பட்டு எச்சரிக்கை செய்யப்பட்டார்கள்.

அதே போன்று அண்மையில் யாழ். மாவட்டத்தில் இருந்து தென்பகுதிக்குச் சென்ற உதைபந்தாட்ட அணியினர் மைதானத்தில் விளையாடும்போது மத்தியஸ்த் தரை அழைத்தமைக்காக மஞ்சள் அட்டை காட்டி எச்சரிக்கப் பட்டுள்ளார்கள்.

இத் தகைய நிலை ஏற்படுவதற்கு யாழ். மாவட்ட உதைபந்தாட்ட மத்தியஸ்த்தர்களும் ஒரு காரணம். இதேவேளை மத்தியஸ்த்தர்களை மட்டும் குற்றம் சாட்டாது மைதானத்தில் விளையாட்டு அணியினரை கட்டுப்பாடுகளைப் போதிக்காமல் விளையாட அனுமதிக்கும் பாடசாலைகளின் விளையாட்டுத்துறை பொறுப்பாசிரியர்களும் இதற்கு பொறுப்பேற்க வேண்டும்.

எமது மத்தியஸ்த்தர்கள் பாடசாலை மாணவர்கள் என்ற கவனத்தைக் கொண்டு சகிப்புத் தன்மையுடனும் மென் போக்குடனும் தமது மத்தியஸ்த்தர் பணியில் நெகிழ்புத் தன்மையைக் கடைப் பிடிப்பதே இதற் குக் காரணம்.

உதைபந்தாட்டத்தின் போது சில பாடசாலை வீரர்களின் செயல்பாடுகள் மற்றும் ஏனைய வீரர்கள் வாய்த்தர்க்கம் புரிவது என்பன உடனடியாக சிகப்பு அட்டை காட்டி வெற்றி யேற்றப் பட வேண்டிய செயற்பாடாகும்.

இந்த நடவடிக்கையை மேற் கொண்டால் குறிப்பிட்ட பாடசாலையின் அதிபர், பொறுப்பாசிரியர் பிரச்சனையை உண் டாக்கி போட்டிகளில் குழப்பத்தை ஏற்படுத்த முனைகிறார்கள். இதனால் நடுவர்களும் நமக்கேன் இந்த வம்பு என விட்டுத் தாம் தப்பிக் கொள்கிறார்கள்.

பாடசாலைகளின் ஆதரவாளர்களும் வெறுமனே தனது பாடசாலை வெற்றி பெற

## பாடசாலை விளையாட்டு அணியை பார்வையாளர்கள் கட்டுப்படுத்துவதா?

வேண்டும் என்று எதிர்ப்பார்க்கின் றார்களே தவிர சரியான முறையில் விளையாட்டு விதிகளுக்கு கட்டுப்பட்டு விளையாடினரா என்று அவர்கள் சிந்திப்பதில்லை.

மத்தியஸ்தர்களைப் பயமுறுத்தி அவர்கள் தமது பணியை மேற்கொள்ளவிடாது தடுத்து நாம் வெற்றி பெற்றதாக எண்ணிக் கொள்ளும் அணிகள் பின்னர் குடாநாட்டுக்கு வெளியே போட்டிகளில் கலந்து கொள்ளும் போது பல்லுடைபட்டுத் திரும்புகின்றன. இங்கே மத்தியஸ்தரின் கட்டளைகளுக்குக் கட்டுப்பட்டு விளையாடப்பழகி இருந்தால் வெளி இடங்களிலும் அதனை செய்யக்கூடியதாக இருந்திருக்கும்.

குடாநாட்டில் அட்டகாசம், சண்டித்தனம் புரிய முற்படும் பாடசாலைகளின் அதிபர்கள், பொறுப்பாசிரியர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஆதரவாளர்கள் எனப்படுவோர் தென்பகுதியில் இடம்பெறும் எந்த ஒரு நிகழ்விலும் ஆட்சேபனைகளை அன்றி வாய்த்தாக்கத்திலோ ஈடுபட்டதில்லை. அவ்வாறு செய்யவும் முடியாது.

அங்கு இத்தகைய முறையற்ற செயற்பாடு களில் ஈடுபட்டால் ஒழுங்கற்று நடவடிக்கைகள் மூலம் அவர்கள் தண்டிக்கப்படுகிறார்கள். இதனால் யாழ்ப்பாணத்தில் காட்டும் வீரப்பிரதாபங்களை தென்பகுதியில் காட்ட முடியாது.

விளையாட்டுப் போட்டிகளில் மத்தியஸ்தர்களாகக் கடமையாற்றும் அனைவரும் தமது கடமையை சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு தவறுகள், பிழைகள் வரும் சந்தர்ப்பங்களில் அவற்றுக்கு சரியான எச்சரிக்கையை விடுக்க வேண்டும். அவ்வாறு செய்ய முடியா விட்டால் அவர்கள் அந்தப் பணியில் இருந்து ஒதுங்கிக் கொள்வதே அவர்களுக்கு சிறந்தது. குடாநாட்டு விளையாட்டு அணிகளுக்கும் சிறந்தது.

தோல்வி அடையும்போது மத்தியஸ்தரை திட்டுவதும் தாக்க முற்படுவதும் வெற்றிபெறும் போது அவனால் பாராட்டுவதும் தான் குடாநாட்டு விளையாட்டு நாகரிகம்.

விளையாட்டு வீரர்கள் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு விளையாட உரிய முறையில் பழக்கியெடுக்க வேண்டிய முக்கிய பொறுப்பு இந்த மத்தியஸ்தர்களுக்கு உண்டு என்பதை அவர்கள் மறந்து விடக்கூடாது. வெளியே இருப்பவர்களுக்குப் பயந்து மைதானத்தில் அவர்கள் வழங்கும் தீர்ப்புகளால் பாதிக்கப்படுவது எமது விளையாட்டுத்துறைதான். பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், ரசிகர்கள் ஆதரவாளர்ள் இதற்கு ஒத்துழைக்க வேண்டும்.

மைதானத்தில் மத்தியஸ்தரின் கடமைக்கு இடையூறு விளைவிப்பவர்களுக்கு எதிராக உரிய ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப் பட வேண்டும். இதன் மூலம் எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் இடம் பெறாமல் தடுக்க முடியும்.

அண்மையில் கூட உதைபந்தாட்ட இறுதிப் போட்டி ஒன்று இடையில் குழப்பப்பட்டது. பாடசா லைகளுகக் இடையே நடைபெற்ற இந்த இறுதிப் போட்டியில் ஒரு அணியினர் விதிமுறைகளை மீறியதற்காகவும் மைதானத்தில் மேலங்கியைக் கழற்றி சுழற்றியமைக்காகவும் வீரர்கள் மஞ்சள் அட்டை காட்டப் பட்டு எச்சரிக்கப்பட்டனர்.

அதே அணியினர் மீண்டும் செய்த தவறுக்கு எதிராக மத்தியஸ்த்தர் செயற்பட்ட போது ஆதரவாளர்கள் என்று கூறப்படும் ஒரு சிலர் அந்த ஆட்டத்தை நிறுத்துமாறு கூறினார்கள். இதற்குக் கட்டுப்பட்டு அந்தப் பாடசாலை அணி மைதானத்தில் இருந்து வெளியேறியது. பல பாடசாலைகளில் அதிபர்கள் கல்வித்திணைக் கள உயர் அதிகாரிகள் முன்னிலையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. எனினும் சம்பந்தப்பட்ட பாடசாலைககு எதிராக கல்வித்திணைக்களம் என்ன ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தது என்பது தான் தெரியவில்லை. இத்தகைய காரணங்கள் மேற்படி சம்பவங்களை இன்றும் தூண்டி விடுகின்றன.

கல்விஅதிகாரிகள் எந்தப் பாடசாலை ஆயினும் பாரபட்சம்காட்டாதுநடவடிக்கைஎடுக்க வேண்டும்.

மைதானம் ஒரு புனிதமான இடம் அங்கு பார்வையாளர்கள் வருவார்கள். அவர்கள் முன்னிலையில் ஒரு பாடசாலை அணியின் வீரர் தனது மேலங்கியைக் கழற்றியமை அந்தப் பாடசாலையின் மானத்தைச் சுழற்றி வீசியதாகவே கருதப்படும் இது அந்தப் பாடசாலையின் அதிபருக்கு புரியாமல் போனது ஏன்?

பாடசாலைகளில் இவ்வாறு சண்டித்தனம் காட்டும் வீரர்கள் பின்னர் கழகங்களில் விளையாடும் போதும் அதே பணியைத் தொடர்கிறார்கள்.

பாடசாலைகள் தமது அணியின் நாணயக் கயிற்றை பார்வையார்களிடம் கொடுத்து விட்டா இருக்கிறார்கள். அவர்களைக் கட்டுப் படுத்துவதும் அவிழ்த்து விடுவதும் பார்வையாளர்களா? என்று சிந்திக்கும் அளவுக்கு சில போட்டிகள் நடந்துள்ளன.

இதற்கு சிறந்த உதாரணமாக அண்மையில் உடுவில் கல்விக் கோட்டத்தில் இடம் பெற்ற ஒரு பாடசாலையின் நூற்றாண்டு விழாவைக் குறிப்பிடலாம். நூல் வெளியீட்டு நிகழ்விலும், பரிசளிப்பு விழாவிலும் அந்தப் பாடசாலை அதிபர் தற்துணிவின் அடிப்படையில் செயல்பட்டதைக் கல்வித் திணைக்கள அதிகாரிகள் உட்பட பலரும் ஆற்றிய உரையின் மூலம் அறியக்கூடியதாக இருந்தது.

கடந்த காலத்தில் வெளியாரின் தலையீடுகள் இருந்த வேளையில் பாடசாலை பெற்ற கல்விப் பெறுபேறுகளையும், புதிய அதிபரின் நடவடிக்கையின்கீழ் பாடசாலை ஜீ.சீ.ஈ. சாதாண மற்றும் உயர்தரப் பரீட்சை ஆகியவற்றில் உயர்ந்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொண்டதையும் இந்த இடத்தில் சுட்டிக் காட்டுவது சாலப் பொருத்தமானது அகும்.

பழையமாணவர்கள், ஆதரவாளர்களின் உதவியும் ஆதரவும் ஒவ்வொரு பாடசாலைக்கும் இருக்க வேண்டும். அதற்காக பாடசாலை நிர்வாகத்தையும் தீர்மானம் மேற்கொள்ளும் திறனையும் அவர்களிடம் விட்டுவிட முடியாது. அதனை பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மேற்கொள்வதே பாடசாலை வளர்ச்சிக்கும் மாணவர்கள் மதிற்பிற்கும் வழிசெய்யும்.

இது விளையாட்டு மைதானத்தில் தொடங்கி பாடசாலைக் கல்விவரை பொருத்தமுடையதாகும். *

**விண்ணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# JAFFNA DIOCESE OF CHURCH OF SOUTH IN

# தென்னிந்திய திருச்சபையின் வை

## DIAMOND JUBILEE CELEBRATIONS OF THE CHURCH OF SOUTH INDIA



On the 27th of September 1947 fourteen dioceses of the Christian Churches in Tamilnadu, Kerala, AndraPradesh, Karnataka and Jaffna (Sri Lanka) decided to form the "Church of South India" and this event took place at St. George's Cathedral, Chennai. Late Rev. Dr. Sabapathy Kulendiram, a reputed Tamil Scholar was a prime – mover of this Union and he was its proud founder – member. Subsequently this Union of Churches brought about admirable growth and expansion in its clergy and the Churches' Membership.

In recent times the Church had to face bad times as result of the Ethnic Conflict in the country and consequent exodus of its illustrious members, clergy as well as laity, leaving for shores of other countries. This has contributed towards depletion of its members. This is true of other denominations also.

On the 60th anniversary of this memorable Union the Catholic Clergy along with the Bishop and the faithful of Jaffna while congratulating the clergy and the faithful of this Union, invoke God's special blessing on the Church of South India in Jaffna. It was the noble and undying desire of Our Lord Jesus Christ "that all may be one" inspired the leaders of this Union; may this noble spirit continue to protect from all human tendencies of divisions and dissentions and continue to spur its members towards a better and stronger communion among the clergy and the faithful of this Union.

**Rt. Revd. Dr. Thomas Savundaranayagam**
*Bishop of Jaffna.*

## Greetings from Rev. S.K. Kadirgamar



It is indeed a privilege for me to submit this message on the occasion of the Diamond Jubilee celebrations of the church of south India (Jaffna diocese)

Sixty years is a long period in the history of institutions and churches. Therefore you have every right to celebrate this Anniversary.

In September 1947 branches of church which had kept apart as a matter of conscience had come together as a matter of conscience. The fundamental significance of the event of 1947 lay in the fact that for the first time since the days of the Apostles the church was able to put into effect deliberately as a matter of conscience and as an act of inescapable religious obligation a long lost and almost forgotten in sight in to something that belongs to its very essence.

Therefore what you are celebrating today is not merely that C.S.I was born 60 years ago but that by the mercy of God it has lived as a church for 60 years.

The inauguration of C.S.I is unique event because the W.C.C is repeatedly compelled to give an assurance that it has no intention of acting as a united church.

What the birth and existence of the C.S.I have taught the Ecumenical world is that it need no longer despair in the face of Schism.

It has therefore brought a new hope, a new confidence and a profound change of out look into the Christian world.

I like to remind the Diocese, the fore – fathers who had made great sacrifices in the process of the inauguration of the C.S.I. One of them was Bishop Hollis the first moderator of the church of south India. It was Bishop Hollis courageous decision to sacrifice the privileges of continuing links with the USPG which made the inauguration of the church of South India possible. You will recall that at the time of the inauguration of the church of South India, the church of England decided not to be in communion with the C.S.I. The constitution of the USPG had made being in communion with the church of England a condition for any church of receive support from USPG. Knowing that by becoming a Bishop of the church of South India he would loose the support of USPG. He chose to be satisfied with what ever the C.S.I was able to provide for him. He emphasized the servant image of Jesus Christ and took deliberate steps to do away with the traditional Anglican practices.

I wish and look forward from your experienced Ecumenical life and practice, a great contribution to Jaffna Christian Union

Please accept our heartiest congratulations on the wonderful achievements in the past. New challenges are around us as we look forward with great enthusiasm to the establishment of a culture of Peace among our people in the country especially in the North. We need to identify the associated opportunities for meaningful mission in a conflict period. Its our hope that the Diocese will continue to exercise leadership in such mission. Please be assured of our prayers and solidarity in mission.

Shalom and every blessing

**Rev. S.K. Kadirgamar**
***President Jaffna Christian Union***

## Message from the Principal of Chundikuli Girls' College....



I have great pleasure in forwarding my greetings to the souvenir to be released to mark the diamond jubilee celebrations of the Church of South India – Jaffna diocese.

The mission of a church is to function as evangelists and spread the good news about Jesus Christ, our saviour all over the world.

*'Go ye into the world and preach the gospel to every creature'.(Mark 16:15)*

When our Lord God walked this earth he healed the sick fed the hungry and preached to those who were in thirst for the word of the almighty. We too are called upon to follow in his footsteps in whatever sphere of life we are in.

We thank God for the pioneers of the Church of South India, who laboured hard to provide spirituality and service to the people of Sri Lanka.

May God's love and blessings be with your church as may its service in the vineyard of God flourish beyond all bounds.

**Mrs.D.Thuseetharan,**
***Principal.***
***Chundikuli Girls' College,***
***Jaffna.***

## அருளாசிச் செய்தி



அன்புசார் பெருந்தகையீர்:-

யாழ்ப்பாணம் தென் இந்திய திருச்சபை அத்தியட்சாதீனம் இன்று தனது வைரவிழாவை கொண்டாடுவதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றோம். மனிதனாக பிறந்த ஒவ்வொருவரும் மனித நேயத்தோடு வாழ்வதற்கு மதங்கள் வழிகாட்டியாக் அமைகின்றன. இவ்வகையில் இறைவனுடைய செய்தியை அன்பின் வழிநின்று போதிக்கின்றனர். கிறிஸ்தவ மக்களின் ஆன்மீக செயற்பாட்டிற்கும் தொண்டின் சேவைக்கும் யாழ்ப்பாண மக்களுக்கு மட்டுமின்றி ஏனைய மாவட்டங்களில் வாழும் மக்களுக்கும் 60வது ஆண்டுகள் நற்பணி ஆற்றி சிறந்து விளங்குவதாகும். இந்த தென் இந்திய திருச்சபை தன் மத மக்களை மட்டுமன்றி ஏனைய மதங்களாகிய இந்து, பௌத்த, இஸ்லாம் மத மக்களுக்கும் தொண்டாற்றியது பெருமைக்குரியது. இப்புனிதப் பணியை 60வது ஆண்டுகள் பணியாற்றிய ஆயர் பெருமான்களையும் அருட்சகோதரர்களையும் வாழ்த்தி பாராட்டுகின்றோம். இந்நாட்டில் நடைபெறும் துன்பமான விடயங்களை இனங்கண்டு அவ்வப்போது வேண்டிய சகல உதவிகளையும் வழங்கி ஆற்றுப் படுத்திய பெருமை தென் இந்திய திருச்சபையை சாரும்

இன்று இத்திருப்பணியை வழிநடத்தும் பேராயர் டானியல் தியாகராஜா அவர்களை வாழ்த்தி பாராட்டுகின்றோம். தென் இந்தியத் திருச்சபை யாழ் அத்தியட்ச ஆதீனம் இன்னும் பல்லாண்டு காலம் வாழ்ந்து இறைபணி ஆற்ற இறைவன் ஆசீர்வதிப்பாராக.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

**இரண்டாவது குருமஹா சந்நிதானம்,**
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக**
**ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்**

## திருச்சபை அன்னைக்கு ஓர் வாழ்த்து



அன்பின் அன்னையே

தென்னிந்திய திருச்சபையாகிய உமக்கு இவ் வாழ்த்து மடலை வரைய கிடைத்த வாய்ப்புக்கும், உம்மைக் குறித்தும் பெருமைப்படுகிறேன்.

உம் பிறப்பு அது மனுக்குலத்திற்கு கிடைத்த சிறப்பு. நீர் ஆற்றும் ஆன்மீகப் பணிகளும், சமூக நலப்பணிகளும் பல,பல. இதனால் வாழ்வில் ஆசி பெற்றோர் பலர் பலர்.

நீர் இந்தியாவுக்கு மாத்திரமன்று இலங்கையிலும் பணியாற்றுவது இலங்கை பெற்ற பாக்கியமன்றோ.

யானும் வாழைச்சேனையில் பணியாற்றும் காலத்தில்தான் உம்மோடு பழக ஆரம்பித்தேன். யாழில் பணியாற்ற கிடைத்த பாக்கியத்தின் காரணமாக அருமைத் தாயாகிய உம்மை நன்கு அறிய ஆரம்பித்தேன். நீர் பெற்ற உமது மைந்தர்களில் சிலர் எனதும் நண்பர்கள்தான். அவர்களோடு கிடைத்த உறவு பாக்கியம், பாக்கியமே.

மகிழ்வாய் வாழ்ந்து வந்த உம் குடும்பத்தில் குழப்பத்தை ஏற்படுத்த அயராது சாத்தான் எடுத்த முயற்சியும், விளைவாக உம் குடும்பத்தில் ஏற்பட்ட பிரிவையும் குறித்து தனிப்பட்ட முறையில் வருந்துகிறேன்.

உம் வேதனையை யானும் அறிவேன். பிரிவை யார் தான் விரும்புவார்? உம்மை ஆற்றித் தேற்ற அன்றாடம் இறை மைந்தனை வேண்டுகின்றேன்.

பிரிந்துபோன உம் மைந்தர்களின் வரவை எதிர்நோக்கி ஏங்கி நிற்கும் உம் மனதை யானறிவேன். பிள்ளைகளுக்காக ஏங்காத தாய்மை ஒன்று உண்டோ? அன்னையே இலங்கையில் உமக்கு இக்கதியோ? கலங்காதே திடமனதாயிரு. இயேசு உம்மை கைவிடார். அவர் உம்மை அறிவார்.

உமக்கு வயது அறுபதாகியும் உமது தளராத மனமும் தைரியமும் குறித்து உம்மை பாராட்டுகின்றேன்.

உமது 60ஆவது பிறந்த தினத்திலே உம்மை வாழ்த்த கிடைத்த வாய்ப்பு யான் பெற்ற பாக்கியமே. நீர் கடந்து வந்த பாதை அநேகர் கடந்து செல்ல கிடைத்த அடிச்சுவடுகளே.

தாயே, தென்னிந்திய திருச்சபையே உமக்கு எமது மனநிறைவான பிறந்த தின வாழ்த்துக்கள்.

உம் குடும்பம் மீண்டும் சமாதானமாய், ஒற்றுமையாய் வாழ உம் குடும்பத்திற்கு நிறைவான இறை ஆசீகள்.

பல்லாண்டு வாழ்கவென உம்மை இரட்சணியசேனை சார்பில் வாழ்த்தும் நான்.

***அருட்பணியாளர். மேஜர். நியூட்டன். எஸ். ஜேக்கப்***
***இரட்சணிய சேனை, யாழ் மாவட்ட அதிகாரி.***

## Greetings from the Principal of Drieberg College Mr.K.Arunthavabalan



I have great pleasure in sending a message to the Souvenir to mark the 60th anniversary celebrations of the Jaffna Diocese of the Church of South India.

Anyone who knows the history of Christian Missions in Sri Lanka knows the American Ceylon Mission and its service in the field of education in Jaffna.

The Ceylon American Mission and its successor the Jaffna Diocese of the Church of South India never gave up their plans if it was useful to the society. When we think of the history of our College we could see this. The seeds for this school was sown in the early part of the 19th century unfortunately there were many obstacles in the initial stage and as a result the school started to run smoothly on its track only in the latter part of the century. This shows the determination and cool headed planning of the church in facing unforeseen circumstances.

The Jaffna diocese of CSI excels in many other fields, too. Their contribution is not limited to the spiritual upliftment of human beings but it spreads far and wide to improve physical well being of society. Whether it is technical education, farming or information technology we can see institutions put up and run by the church.

Being one of the past pupils of this school I cherish the memory of how I was nurtured and taught by my alma mater that is a gift of the American Mission and has been continuously supported by the Jaffna diocese of the Church of South India.

I wish the anniversary celebrations be successful on behalf of the School Society.

**K. Arunthavabalan**
***B.A(Hons), M.Ed, PGDE, PGDEM.***
***Principal.***

## தன்னலம் கருதாது பணியா



யாழ் குடாநாட்டில் தமது தன்னலங் கரு
களில் தென்னிந்தியத் திருச்சபையினரும் ஒ
சேவையின் அறுபது ஆண்டு நிறைவை இ
இருப்பது குறித்து பெருமகிழ்ச்சி அடைகின்
சமய நம்பிக்கையும் இவர்களால் இம் மன
திருச்சபையில் காலத்துக்குக் காலம் பதவி வ
இருக்க முடியாது. இவர்களில் அதி. வண.
நூற்றாண்டு காலத்துக்கு மேலாக எங்க
தொடர்புபட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. இங்கு நடைபெற்ற
தவறாது பங்குபற்றுபவர் அவர். மேலும் இன்று பதவியில்
தியாகராஜா அவர்களும் எங்களோடு மிகவும் ஈடுபாடு கெ
எமக்கு நீங்காத தொடர்பு ஏற் பட்டு வருகிறது. சமயம் என்பது ச
கொள்ளும் நெறியாகும். அந்த வகையில் சேவையை மையம
திருச்சபையின் ஆக்க பூர்வமான பணிகளை நான் மிகுதியுட
இம்மண்ணில் நல்லபடி நிறைவு பெற திருவருளைப் பிரார்த்

**கலாநி**

**தலை**

**We extend our wholehearted Support to Our Bishop**
**Rt.Rev. Dr.Daniel S.Thiagarajah**



## Message from th Acting Vice-Chancellor, Unive



It is indeed a great pleasure to write this m
published on the occasion of the 60th annivers
the Church of South India in October 2007.

The Church of south India was establish
Jaffna Diocese is one of the fourteen found
historic day. I understand that the CSI now
through its twenty two dioceses with fifteen
three thousand clergy spread over in the four S
Andhra Pradesh and Karnataka and Jaffna.
of the Church of South India in Jaffna and its contributions t
are well known and very much appreciated. The CSI continu
activities until the school were nationalized in Sri Lanka in 196
a few big schools as private schools, they have turned their att
Day Care Centres, Vocational Training Centres and Orphana
Their services to the affected people of the war-torn North an

I rejoice in sending my warmest greetings to the Bishop a
Church of South India as they celebrate the Diamond Jubilee
endeavors.

*Office of the Vice-Chancellor,*
*University of Jaffna.*

## GREETINGS TO CHURCH O Prof. Dr. A. Sa



I am glad to know that the Jaffna Diocese
Church of South India at Vaddukoddai. I a
greetings to the proposed souvenir to be rele
India became familiar to me only when Man
Department of Jaffna College on the 1st Septem
in Kandy. Since then I am privileged to be
Diocese of the CSI. I will never forget Rt. Re
old young Lecturer at the College. One day Bis
House and wanted me to go through his book
young to go through his well written book. I confessed. H
several occasions to be with Rt. Rev. Bishop Ambalavanar.
Bishop Kulandran, I admired the spiritual majestic form of Bis
of studying with Rt. Rev. Dr. Bishop Jebanesan at the Univer
Bishop Daniel Thiagarajah was a Doctoral candidate when I
Faculty at University of Jaffna. and I was very pleased to atte
of Degree to him.

I learnt that Jaffna Diocese was reluctant to join the Chur
to read the following from an essay written by Bishop Victor

"There was a doubt as to whether the Church in Jaffna sh
or wait for the Church union in Sri Lanka, which was under
But the Jaffna church decided to join the united church which
the union was accomplished in Sri Lanka at some future date.
would join the Church of South India in 1947, but would late
place."

After Stating this, Bishop Premsagar praises the zeal a
people for the unity of the church.

This united church has contributed enormously to the spiri
and the educational and cultural development of the people o
and best wishes to the Church of South India (Jaffna Diocese
take this opportunity to wish His Lordship, the Rt. Rev. Dr D
years to serve the people of Jaffna Diocese materially and sp

***Director/***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# TH INDIA DIMOND JUBILLE CELEBRATIONS

# வைரவிழா சிறப்பிதழ் - 13.10.2007

## ாது பணியாற்றிய திருச்சபை

தமது தன்னலங் கருதாத பணிகளை நிலைநாட்டி வைத்தவர் திருச்சபையினரும் ஒரு பகுதியினர் ஆவர். அவர்கள் ஆற்றிய ஆண்டு நிறைவை இந்த ஆண்டில் பெருவிழாவாக எடுக்க பருமகிழ்ச்சி அடைகின்றேன். அன்பும், சேவையும், பக்தியும், இவர்களால் இம் மண்ணில் மேலோங்கியது எனலாம். இத் துக்குக் காலம் பதவி வகித்த அருளாளர்களை நாம் பாராட்டாமல் வர்களில் அதி. வண. கலாநிதி S. ஜெபநேசன் அவர்கள் கால் க்கு மேலாக எங்கள் துர்க்காதேவி தேவஸ்தானத்தோடு கது. இங்கு நடைபெற்ற மகளிர் இல்ல பரிசளிப்பு விழாக்களில் ம் இன்று பதவியில் இருக்கும் அதி. வண. கலாநிதி. D.S. மிகவும் ஈடுபாடு கொண்டவர். இதனால் திருச்சபையோடு றது. சமயம் என்பது சமூகங்களின் இணைப்பை கட்டிக்காத்துக் ல் சேவையை மையமாகக் கொண்டு விளங்கும் தென்னிந்திய களை நான் மிகுதியும் பாராட்டுகிறேன். அவர்களின் சேவை திருவருளைப் பிரார்த்திக்கின்றேன்.

*கலாநிதி செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி*
*சமாதான நீதிபதி*
*தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்*
*தெல்லிப்பழை, ஸ்ரீலங்கா*

port

ah



## lessage from the ancellor, University of Jaffna

pleasure to write this message of greetings to the Souvenir to be on of the 60th anniversary celebrations of the Jaffna Diocese of dia in October 2007.

th India was established in September 1947 in Chennai. The of the fourteen founding dioceses that came together on that tand that the CSI now serves more than four million people dioceses with fifteen thousand congregations and more than pread over in the four South Indian States of Tamil Nadu, Kerala, arnataka and Jaffna. The American Mission is the forerunner nd its contributions to the educational development of Jaffna ted. The CSI continued these educational and developmental ed in Sri Lanka in 1960. Since then, while owning and running y have turned their attention more on social service. Running Centres and Orphanages are their main activities at present. the war-torn North and East Sri Lanka are commendable.

etings to the Bishop and members of the Jaffna Diocese of the the Diamond Jubilee and wish them success in all their future

**Prof.R. Kumaravadivel**
*Acting Vice-Chancellor*

## CHURCH OF SOUTH INDIA
## Prof. Dr. A. Sanmugadas

at the Jaffna Diocese is celebrating the 60th anniversary of the at Vaddukoddai. I am extremely happy to send this note of d souvenir to be released on that occasion. Church of South o me only when Manonmany and I joined the Undergraduate llege on the 1st September 1965 just two days after our marriage am privileged to be familiar with four Bishops of the Jaffna ll never forget Rt. Rev. Bishop Kulandran. I was just 25 years College. One day Bishop Kulandran called me to his Bishop's go through his book on the History of Tamil Bible. I was too ook. I confessed. He accepted it with a broad smile. I had Bishop Ambalavanar. While I appreciated the simplicity of majestic form of Bishop Ambalavanar. I had the rare privilege banesan at the University of Ceylon, Peradeniya. Rt.Rev. Dr. ral candidate when I was the Dean of the Faculty of Graduate s very pleased to attend to all formalities relating to the award

ctant to join the Church of South India 1947. It is interesting ten by Bishop Victor Premsagar:

Church in Jaffna should join the church union in South India a, which was under serious consideration at about that time. united church which was already taking place and not wait till at some future date. However, all agreed that Jaffna Diocese 1947, but would later join the Sri Lanka union when it took

ar praises the zeal and the enthusiasm shown by the Jaffna

ormously to the spiritual development of the Jaffna Christians ment of the people of Jaffna. I extend my warmest greetings ndia (Jaffna Diocese) on its Diamond Jubilee Celebrations. I ip, the Rt. Rev. Dr Daniel S. Thiagarajah to have many more se materially and spiritually.

**Prof. Dr. A. Sanmugadas**
*Emeritus Professor*
*Director/ Media Resources & Training Centre*
*University of Jaffna.*

## ஆன்மீகத்துக்கு ஊடாக ஓர் அரிய பணி



எம் மண்ணில் நிறுவனரீதியாகக் கல்விப்பணி, ஆன்மீகப் பணி, அறப்பணியாற்றிய ஸ்தாபனங்களில் யாழ்ப்பாணம் தென்னிந்தியத் திருச்சபை தன்பங்களிப்பினை சிறப்பாக நிலைநாட்டியுள்ளது. இச்சபையின் அறுபதாவது ஆண்டு நிறைவு விழாக் குறித்து வாழ்த்துவதில் மகிழ்வெய்துகிறேன்.

ஏழைகளைப் பராமரிப்பது கல்வி வழங்குவது உன்னதமான பணியாகும். அப்பணியில் ஆன்மிகத்துக்கூடாக அரிய பணியாற்றிய இச் சபையின் சேவையை யாவரும் அறிவர். இணுவிலில் எனது பிறந்த வீட்டுக்கு அருகே உவிலியம் மேதர் ஞாபக பெண்கள் நிலையமும், கிறிஸ்தவ சேவா ஆச்சிரமமும் இயங்கி வருகிறது. வண. பெரியண்ணை, வண. சின்னண்ணை வண. சாம் அண்ணை என் மீது மிகுந்த பாசம் கொண்டவர்களாக என் பாலப் பருவத்தில் பழகினர். எனது ஆன்மிக இலக்கிய வாழ்வில் இச் சபையின் முதல்வர்களில் ஒருவராக விளங்கிய கலாநிதி அதி.வண.சு.ஜெபநேசன் அவர் களின் தொடர்பு ஏற்பட்டது. அவ் வகையில் இன்றைய முதல்வர் கலாநிதி அதி. வண. D.S.தியாகராஜா அவர்களின் தலைமையில் நடைபெறும் வைரவிழா சிறக்க வாழ்த்துவதோடு மேற்படி சபையின் அறப்பணிகள் சிறக்க இறைவனை இறைஞ்சி அமைகிறேன்.

*ஆறு. திருமுருகன்.*

## Greeting Message from the Government Agent



I am extremely happy that the Church of South India, Jaffna district is publishing a Magazine At the completion of its 60 years long carcer.

The Church of South India has been established on 27th September, 1947 at St. George Church in Chennai and renders its sacred services to nearly 4 million people through 22 Seminaries and expands its Yeoman service to the sectors such as Education and Health, furthermore establishing schools carrying orphans hospitably in children's homes and offering Scholarships to students Sans differences are zoom of its important teams.

Expansion of its service to Tamil Nadu, Andra Pradesh and Karnartic in India and in Jaffna clearly shows its nobleness. It is remembered that the Church of South Inida joins hand and supporting the Tsinami affected people

My heartfull wishes on this Diamond Jubilee for the continuity of its Yeoman Service.

**G. Ganesh**
*Government Agent / District Secretary,*
*Jaffna District.*

## Greetings from Revd. Dr. Justin B. Gnanapragasam



It is with great pleasure that I send this message of warm greetings to the Church of South India, Jaffna Diocese, on the occasion of the 60th anniversary celebrations of the Diocese.

The Christian missionaries working in India found that the divisions among them were a scandal and it hindered their missionary activities. In response to the call of Christ, "that they all may be one", the first union among the churches was born on the 27th of September 1947 in Chennai and Jaffna Diocese was one of its founding members. The Jaffna Diocese of the Church of South India has been a tower of strength to the people during the time of civil war that has lasted over 20 years. The Bishops and the priests were with the people in their sufferings and were a great source of comfort. With their efforts to eradicate poverty among the poorest of the poor, the Jaffna Diocese of the CSI has borne witness to Christ's love among our Hindu brothers and sisters as well. The two big educational institutions, the Jaffna College and the Uduvil Girls' College, stand as a monument to the colossal contribution Jaffna Diocese of the Church of South India has given to the Jaffna Community.

It is my wish that God's blessings continue to be with the Jaffna Diocese of the CSI and that their ministry the Word of God bear much fruit. May the Holy Spirit guide and direct all their activities.

**Revd. Dr. Justin B. Gnanapragasam**
*Rector - St. Patrick's College, Jaffna.*

## மனிதனைப் புனிதனாக்கும் பணியில் திருச்சபை



அறுபது ஆண்டுகளை நிறைவு செய்து மணிவிழாக் கொண்டாடும் தென் இந்தியத் திருச்சபையின் யாழ்.ஆதீனத்தின் நிர்வாகிகள் அனைவரையும் இதயபூர்வமாக வாழ்த்துகின்றேன். சமயப் பணி, கல்விப்பணி, சமுதாயப்பணி ஆகிய மூவகைப் பணிகளையும் ஒருங்கே புரியும் சபையினரின் தன்னலமற்ற தொண்டினைப் பாராட்டுகின்றேன். கல்வியும், ஒழுக்கமும், நேர்மையும், ஆன்மீக ஞானமும் நிறைந்த குரு முதல்வர்கள் தென் இந்தியத் திருச்சபையின் யாழ்.பிராந்திய பேராயர்களாகப் பணிகள் பல புரிந்து நமது மக்களின் இதயங்களல் இடம்பிடித்துள்ளார்கள். இவர்கள் வரிசையில் தமிழ்ப்பற்று நிறைந்த பேராயர் வணக்கத்துக்குரிய கலாநிதி ஜெபநேசன் அவர்களைத் தொடர்ந்து வணக்கத்திற்குரிய கலாநிதி டானியல் தியாகராஜா அவர்கள் பேராயராக திருநிலைப் படுத்தப்பட்டுள்ளார்கள்.


இன்றைய சமுதாயம் உடற்பலம், மனோபலத்திற்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை ஆத்ம பலத்திற்கு (Spiritual Power) கொடுப்பதில்லை. ஆத்ம பலம் என் பது உள்ளொளி ஆகும்.

மனிதனைப் புனிதனாக்கும் தெய்வீகப் பணியினைச் செவ்வனே செய்வதில் தென் இந்தியத் திருச்சபையின் யாழ்.ஆதீனத்தினர் செய்து வரும் பணிகள் அளப் பரியதாகும்.

சேவை செய்தலை வழிபாடாக நினைத்து தென் இந்தியத் திருச்சபையின் யாழ்.மாவட்ட ஆயரும் குரு முதல்வர்களும் ஆற்றிவரும் தன்னலமற்ற பணிகளுக்கு இறைவன் தோன்றாத் துணையாக நின்று வழிநடாத்த வேண்டும் என இறையருளைப் பிரார்த்திக்கின்றேன். நமது நாட்டையும், மக்களையும் கால் நூற்றாண்டு காலத்திற்கு மேலாகப் பிடித்திருக்கும் துன்பங்களும், துயரங்களும் நீங்கிச் சாந்தியும், சமாதானமும் நிலைபெறுவதற்கு நாம் அனைவரும் ஒருமித்த குரலில் உள்ளம் உருகி எல்லாம் வல்ல இறைவனைச் சிக்கெனப் பிடித்து திரிகரண சுத்தியுடன் பிரார்த்தனை செய்வோமாக!

*சிவமாகலிங்கம்*
*முன்னாள் விரிவுரையாளர் - பலாலி ஆசிரிய கலாசாலை*
*முன்னாள் உதவி [illegible]*
*திணைக்களம்*
*ஆசிரியர் - யாழ்ப்பாணக் கல்லூரி வட்டுக்கோட்டை.*

## A Message from the Archdeacon of Jaffna



Greetings in the name of our Lord and Saviour Jesus Christ.

In 1947, when India became the first country in South Asia to receive her independence from colonial rule, the churches of the Anglican Communion in South Asia belonged to the Province of India, Pakistan, Burma and Ceylon. A month after Indian independence, the United Church of South India was born in September 1947. It was the culmination of nearly thirty years of negotiations between the churches belonging to the Anglican, Methodist, Congregational, Presbyterian and Reformed traditions. This first Church Union in South Asia was a welcome development although the Anglican Province of India, Pakistan, Burma and Ceylon was losing an Anglican identity in South India. Since that historic landmark date in the ecumenical movement, the churches in North India, Pakistan and Bangladesh have also entered into corporate union. The world-wide Anglican Communion is in full communion with all these Churches and the Bishops of those Churches. Some Churches in Sri Lanka also, including the JDCSI and the Anglican Church have also been in negotiation towards an United Church for a period of over fifty years, and we hope that this movement will bear fruit soon.

The sixtieth anniversary of the Church of South India is therefore a significant for all of us who believe in ecumenism. It is our hope that the inspiration of the founding fathers of the Church of South India will encourage our churches in both India and Sri Lanka to be catalysts of dialogue and unity in diversity.

The Jaffna Diocese was one of the founder Dioceses of the Church of South India. It is our prayer that the Jaffna Diocese will continue in the years to come to uphold and offer the principles on which the Church of South India was built - combining episcopacy with synodical government and holding steadfastly to our faith and practice based on scripture. It is on these same shared principles that the Anglican Communion has been and continues to journey with the Church of South India in furthering the unity, witness and mission of the church in God's world.

With my greeting of Peace and Blessing.

**The Ven S.P Nesakumar**
*Archdeacon of Jaffna*

## Greetings from the Principal of Jaffna College Noel A. Vimalendran



The Jaffna Diocese of the Church of South India celebrates its 60th Anniversary on the 13th of October 2007. This was founded in great faith by our first Bishop The Rt. Rev. Dr. S. Kulendran, and it has grown despite of all turmoil, war and challenges. We, the Jaffna College community extend our best wishes to the hands which sustain the name J.D.C.S.I. with all courage and devotion. I should say that it's no human source but God's grace which is upholding the J.D.C.S.I. Let us all work together and be accountable to God and not to human beings. Jesus Christ wants us to be in a mission of labour, labouring unto the needs of fellow human beings.

I would like to address the present situation at this juncture. We may have differences of opinion, but we should all understand and realize that we do not have any differences in our belief. Therefore, I earnestly urge the members of the J.D.C.S.I. to instill in all that we are serving our Master. On this day of the celebration let us all commit ourselves to the Lord Jesus Christ and wait for his grace and guidance. Let us also foresee the vision Bishop Kulendran had in 1947. Leaders may come and leaders may go, but God, our Lord Jesus Christ is the judge, and our Saviour will definitely reign. Let us have a glorious union under the banner of J.D.C.S.I with all great traditions.

Jaffna College though it has a separate entity, it gave all his men to serve in the existence of J.D.C.S.I. It's my fervent hope that Jaffna College will continue to extend the services without loosing its identity.

Let us remind ourselves that this is an occasion for all of us to commit to a fuller and deeper Christian Life, and bear witness to Christ in solidarity. May the coming years be a time of achievements and dedication, a time to gain new hope and inspiration for the future working with unity, peace and reconciliation, which we believe are the channels of God's manifestation of love.

Wishing you all success in the future endeavours of the Diocese in serving the poor, the needy and the neglected people in this blood-soaked land.

With our prayers and blessings for the anniversary celebrations.

**Prinipal**
*Jaffna College,*
*Vaddukoddai.*

## தென் இந்தியத் திருச்சபை செயலாளரின் வாழ்த்து



தென்னிந்திய திருச்சபையின் அறுபதாவது ஆண்டு வைர விழாவில் யாழ்.ஆதீனத்தின் காரியதரிசியாக என்னுடைய வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் பெருமகிழ்வு அடைகின்றேன்.

தென்னிந்திய திருச்சபையானது நீண்ட, பாரம்பரியமிக்க திருச்சபைகளின் ஒருமித்த ஐக்கியத்தின் வெளிப்பாடாக 1947ம் ஆண்டில் உதயமானது. இன்று அது அறுபதாவது ஆண்டின் நிறைவை காண்கின்றது என சொல்லும் போது இத்திருச்சபை சந்தித்து கொண்ட, ஐக்கியத்தை குலைக்கும் செயற்பாடுகள், சவால்கள் ஒவ்வொன்றையும் நினைத்துப் பார்க்கவும் எமை தூண்டுகின்றது. எனவே கடந்த வருடங்களில் இவ்வாறான வேதனையான காரணிகளுக்கும் தங்கள் முகத்தை கொடுத்து இந்தத் தென்னிந்திய திருச்சபையின் யாழ் ஆதீனத்தை வழிநடத்திய அதன் ஆயர்களையும் நான் நினைத்துப் பார்க்கின்றேன்

அந்த வகையில் மகாகனம் S. குலேந்திரன், மகாகனம் D. J. அம்பலவாணர், மகாகனம் S.ஜெபநேசன் போன்றவர்களுக்கு பின்னாக இந்நாட்களில் இந்த ஆதீனத்தை பொறுப்பேற்று வழிநடத்தும் எமது நான்காவது ஆயர் மகாகனம் D.S.தியாகராஜா எனும் நமது ஆயரும் இந்த ஐக்கியத்தையும், ஒருமைப்பாட்டிற்காகவும் தொடர்ந்து உழைத்து வருவதை காணும் போது உண்மையிலேயே மனமகிழ்ச்சியடைகின்றேன்.

தென்னிந்தியத் திருச்சபை யாழ்ப்பாண ஆதீனமானது அமெரிக்கன் இலங்கை மிஷனுடன் ஒன்றித்தே காணப்படுகின்றது. ஏனெனில் அதனை நாம் "மூவொரு கடவுளின் ஒருமைப்பாட்டின்" தன்மையுடன் இணைத்ததாகவே பார்க்க வேண்டும்.

எனவே தென்னிந்திய திருச்சபையின் ஐக்கியமும் சேர்க்கையுமானது ஒரு புதிய "பெந்தேகொஸ்தே" அனுபவம் என்றே நாம் சொல்ல வேண்டும்.

எனவே தென்னிந்திய திருச்சபையானது வரும் ஆண்டிலும் ஐக்கியத்தினையும், ஒருமைப்பாட்டிற்கும் உழைக்கின்ற ஒரு உலகிலே பெரிய திருச்சபைகளில் ஒன்று.

அதே வேளையில் புதிய நம்பிக்கையுடன் தொடர் பயணத்திற்கும் சவால்களுக்கும் முகங் கொடுப்பதற்கும் ஆயத்தப்படுவோம். ஐக்கியத்திற்காகவும், ஒருமைப்பாட்டிற்காகவும் ஒன்றுபடுவோம். இதுவே தென்னிந்திய திருச்சபை

*வண. இ. ராஜ்குமார்,*
*செயலாளர்,*
*தெ.இ.திருச்சபை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி கந்தசாமி பாலசௌந்தரி

மலர்வு 22.03.1938 | உதிர்வு 16.10.2004

திதி: 13.10.2007

அம்மா அம்மா எங்கள் தெய்வமே!
அன்போடு அரவணைத்த அம்மாவே!
ஆயிரம் உறவுகள் அவனியில் இருந்தாலும்
ஆறுதல் கூறயாருமில்லை
மூன்று ஆண்டுகள் சென்றாலும்
உன் நினைவுடன் வாடுகிறோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உங்கள் பிரிவால் வாடும்:
புதிய செம்மணி வீதி,
கல்வியங்காடு. (66877) கணவர், மகன், மருமகள், பேரன்.

## வேலணை பிரதேச செயலர் பிரிவில் சிறுவர், முதியோர்தின விழா

நல்லூர் ஒக்.13

வேலணைப் பிரதேச செயலர் பிரீவில் சிறுவர் முதியோர்தினவிழா நேற்றுமுன் தினம் வியாழக்கிழமை வேலணை பிரதேச செயலக மண்டபத்தில் பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் தலைமை யில் நடைபெற்றது.

மல்லாகம் மாவட்ட நீதிபதி திருமதி சறோஜினி இளங்கோவன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரிசில் பரீட்சை யில் சித்தியடைந்த வேலணைப் பிரிவைச் சேர்ந்த சிறுவர்களுக்கு சைக்கிள்களை வழங்கினார்.

பிரதேச செயலர் நந்தகோபாலன் உட்பட கிராமசேவகர்கள் ஆகியோர் முதியோர்களைக் கௌரவித்து பரிசில்களை வழங்கினர்.

செயலகப் பிரிவில் இடம்பெற்ற கட்டுரை கவிதை, ஓவியப் போட்டிகளுக்கான பரிசில்களை பிரதேச செயலர் மற்றும் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி. தி.மீரா, வேலணை வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.இராசேந்திரன், வண பிதா ஸ்ரனி பிலிப், கோட்டக் கல்வி அதிகாரி எஸ்.சரவணபவானந்தன் ஆகியோர் வழங்கினர். (203-111)

## 16ஆம் வருட நினைவு நாள்

தோற்றம் 17 . 03 . 1935



மறைவு 13 . 10 . 1991

### திருமதி ஞானம்மா இம்மானுவேல்

அன்பும் நட்பும் எங்குள்ளதோ
அங்கே இறைவன் இருக்கிறார்
என்ற வாக்குக்கு அமைய வாழ்ந்த
எங்கள் அன்பின் அம்மாவே
உங்களை எம் வாழ்வில் என்றென்றும் மறவோம்.

க.நவரத்தினம் (மைத்துனர்),
இல 4, கோயில் வீதி
ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (66882)

அன்புடன் நினைவுகூரும்:
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், மற்றும் உறவினர்.

## 9ஆம் வருட நினைவஞ்சலி

நேசத் தாமரையே

### செல்வி சுகந்தினி ஸ்ரீஸ்கந்தராஜா



(1997ஆம் வருட வர்த்தகப்பிரிவு மாணவி, யாழ்.சுண்டிக்குளி மகளிர் கல்லூரி)

அன்னையின் அரவணைப்பில் 22-10-1978 | ஆண்டவன் பிடியில் 13-10-1998

பொன்மயிலே! புதுச்சரமே!
புன்னகையே! புதுமலரே!
பூமுகத்தைக் காண்போமா?
புன்னகையை இரசிப்போமா?

நெஞ்சம் கனக்குதம்மா!
நீண்ட இருள் சூழுதம்மா!
வழிஏதும் அறியாமல்
விழியிரண்டும் சொரியுதம்மா!

சிந்தையிலே குடியிருக்கும்
எம் செல்வத் திருமகளே!

சொந்தங்கள் எமைவிட்டு
ஒன்பதாண்டுகள் சென்றதெங்கே?

ஆசைச் செல்வமே! அன்பு மலரே!
பாசம் மாறாத நேசத் தாமரையே!
கைககள் கூப்புகின்றோம்
கண்மலர்கள் தாவுகின்றோம்
இறைவன் பாதத்தில்
இன்புற்று வாழுமம்மா!

நீங்காத நினைவுகளில் வாடும்:
குடும்பத்தினர்.

## சுகாதாரம் பேணாத வர்த்தகர் மீது வழக்கு

யாழ்ப்பாணம்,ஒக்.13

மட்டுவில் வடக்குப் பகுதியில் உணவு ஒழுங்கு விதிகளுக்கு முரணாக உணவு தயாரித்தும் களஞ்சியப்படுத்தியும் விற்பனைக்கும் வைத்திருந்த வர்த்தகர் மீது சுகாதாரப் பகுதியினர் சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

ஒவ்வாத நிலைமையின் கீழ் உணவுப் பொருள்கள் களஞ்சியப் படுத்தியமைக்காகவும் சுட்டுத்துண்டு இல்லாத உணவுப் பொதிகளை விற்பனைக்கு வைத்திருந்தமைக்காகவும் இந் நபருக்கு எதிராக பொது சுகாதாரப் பரிசோதகர் வழக்குத் தாக்கல் செய்துள்ளார். (203-207)

## ஒப்பந்த அடிப்படையிலான மீள் நியமனம் விண்ணப்பம் கோரல்

### பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவு, யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம் சுகாதார சேவைகள் மாகாணப் பணிப்பாளர் பிரிவில் உள்ள வைத்தியசாலைகளில் உள்ள வெற்றிடங்களிற்கு ஒப்பந்த அடிப்படையில் மீள் நியமனத்தில் 2008ஆம் ஆண்டு காலத்தில் கடமையாற்றுவதற்கு பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. வைத்திய. உத்தியோகத்தர்
2. பதிவு வைத்திய உத்தியோகத்தர்/ உதவி வைத்திய உத்தியோகத்தர்
3. மருந்தாளர்
4. ஆய்வுகூட தொழில்நுட்ப உத்தியோகத்தர்
5. தாதிய உத்தியோகத்தர்
6. குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்
7. ஊடுகக் கதிர் படப்பிடிப்பாளர்
8. பொதுச்சுகாதார வெளிக்கள உத்தியோகத்தர்

விண்ணப்பிக்க விரும்புவோர் பின்வரும் ஆவணங்களுடன் 31.10.2007ஆம் திகதிக்கு முன்னர் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பின்வரும் ஆவணங்களின் 3 பிரதிகளுடன் விண்ணப்பிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

1. ஓய்வூதிய கொடைப்பத்திரம்
2. இறுதியாக பெற்றுக்கொண்ட சம்பளப்படிநிலையில் கடமையாற்றுவதற்கான சம்மதக்கடிதம்
3. சமாதான நீதவானின் சான்றிதழ்
4. வட மாகாணத்தின் எப்பகுதியிலும் கடமையாற்றுவதற்கான சம்மதக்கடிதம் .
5. தற்போதைய உடல், உள நிலை பற்றிய மருத்துவ உத்தியோகத்தரின் சான்றிதழ்
6. பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்
7. ஓய்வூதியத்தை உறை நிலையில் வைப்பதற்கான சம்மதக் கடிதம்.

**வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன்,**
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம். (சி/53952)

## மானச சஞ்சாரம் - 07

### உலக உளநல நாள் நிகழ்வுகள்

காலம் :- நாளை (14.10.2007) ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 - 12.30 மணிவரை
இடம்:- யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கு
பிரதமவிருந்தினர்:- க.கணேஷ், (யாழ்.மாவட்ட அரச அதிபர்)
சிறப்பு விருந்தினர்:- வைத்திய கலாநிதி ஜோன் மகோனி (உலக சுகாதார நிறுவனம்)
நிகழ்வு:- உளநல நாள் தொடர்பான ஜோன் மகோனியின் விசேட உரையும் தவநாதன் றொபேட் குழுவினருடைய 'இராகபாவம்' இசை நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

அனைவரும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
விழா ஏற்பாட்டாளர்கள்,
உள மருத்துவப் பிரிவு, யாழ்.போதனா வைத்தியசாலை. (66886)

## மரண அறிவித்தல்கள்

### சதாசிவம் றோசாமலர்



தம்பாலை, அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவம் றோசாமலர் 10.10.2007 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சதாசிவத்தின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற முத்தையா மற்றும் மாணிக்கம் தம்பதியரின் பாசமிகு மகளும், சித்திரா, சதாகரன், (ஜேர்மனி), பிரபாகன் (சமூக பாதுகாப்பு சபை, கச்சேரி), சுதாகரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும் கனகரட்ணம், அற்புதராசா (கொழும்பு), மகேஸ்வரி, நேசமலர் ஆகியோரின் சகோதரியும், ரவீந்திரன், ஜெயந்தி ஆகியோரின் பாசமிகு மாமியும், கந்தையா, குமாரசாமி, பூரணம், தேவி, சிலோசனா ஆகியோரின் மைத்துனியும் நிதுஜா (யா/புனித தெரேசா மகளிர் கல்லூரி), வினிஜா, கிதுஜா ஆகியோரின் அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.10.2007) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் தம்பாலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நாச்சிமார் வீதி;
தம்பாலை, அச்சுவேலி. (66876) குடும்பத்தினர்.

### கந்தர் முருகேசு



புத்தூர் கிழக்கு, புத்தூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாவும் கொண்ட கந்தர் முருகேசு (ஓய்வுபெற்ற நிலஅளவை உத்தியோகத்தர்) 09.10.2007 செவ்வாய்க்கிழமை இறைவனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தர்-பார்வதி தம்பதியரின் பாசமிகு புதல்வனும், காலஞ்சென்றவர்களான வைரமுத்து-சேதுப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற லக்சுமி மற்றும் அன்னப்பிள்ளை, காலஞ்சென்றவர்களான மாணிக்கம், பரமநாதன், வேலுப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரனும், நல்லம்மாவின் அன்புக் கணவரும், தியாகலிங்கம் (கனடா), புவனேஸ்வரி, காலஞ்சென்ற பாலகிருஷ்ணன், மற்றும் இராசலட்சுமி, புவனேந்திரன் (கனடா), புஸ்பதேவி, காந்தீஸ்வரி (கனடா), இரவீந்திரன் (கனடா), நேமிநாதன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் வசந்தி (கனடா), ரூபதாசன், சகுந்தலாதேவி, நாகராசா (கனடா), ரதி (கனடா), வரதராஜன், யோகநாதன் (கனடா), ஜெயந்தினி (கனடா) ஆகியோரின் மாமனும், நிரஞ்சனி, திவ்வியா, புனிதன் (கனடா), தனுசன், சுஜீவன், சதீசா, அன்பரசன், சிந்துஜா, ஜெசிந்தா, புவியரசன், எழில ரசன், திஷா+பாஸ்க்கரன், லஜீபன், மதுரா, றஜிதா, கனடாவில் வசிக்கும் கேதாரன், சகானன், பகீஷன் மற்றும் சங்கீர்த்தனா, ரிஷிசங்கர், திலிக்ஷனா, கனடாவில் வசிக்கும் கஜானி, ஆதவன் மற்றும் ஆர்வலன், சீராளன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும் டயானா, டிலக்ஷினா, டனோஜன், யதுசனா ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் நாளை (14.10.2007) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் முற்பகல் 10 மணி யளவில் புத்தூர் கிழக்கு மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
புத்தூர் கிழக்கு, புத்தூர். T.P:-0777-149163 குடும்பத்தினர்.
(66559)

## மரண அறிவித்தல்கள்

### லில்லி பிலோமினா பிரான்சிஸ்

(அன்னம்)

மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட லில்லி பிலோமினா பிரான்சிஸ் 11.10.2007 காலமானார்.

அன்னார் அருளானந்தம் பிரான்சிஸின் (புனித மடுத்தீனார் குருமடம்) அன்பு மனைவியும்காலஞ்சென்றவர்களான எலியாஸ் - விக்ரோறியா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற விமல் மற்றும் அருந்ததி, அனுஷா, நிக்ஷன் ஆகியோரின் அன்புத் தாயும் மார்கிறேற், ஹென்றியின் அன்புச் சகோதரியும் தாசனின் மாமியும் ஜெனிஸ், றொயிஸ், அல்வின்ஸின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க வழிபாடு இன்று (13.10.2007) பிற்பகல் 2 மணிக்கு மிருசுவில் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் புனித நீக்கிளஸ் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சேச் றோட்,
மிருசுவில். (66880) கணவர், பிள்ளைகள்.

### தாண்டவி கந்தையா



கைதடி கிழக்கு, கைதடியைச் சேர்ந்த தாண்டவி கந்தையா நேற்று (12.10.2007) வெள்ளிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (13.10.2007) சனிக்கிழமை நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக முற்பகல் 11 மணிக்கு பூதவுடல் கைதடி ஊற்றல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கைதடி கிழக்கு. (66892) குடும்பத்தினர்.

## நெஞ்சகலா நினைவலைகள்

## ஓராண்டு நினைவஞ்சலி

மண்ணில் 25 ★ 11 ★ 1949



விண்ணில் 24 ★ 09 ★ 2006

அமரர்

### இராஜசிங்கம் சிவராமலிங்கம்

(சிரேஷ்ட முகாமையாளர், இலங்கை வங்கி இரண்டாம் தரக் கிளை, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்)

திதி: துதியை 13.10.2007

தென்பூட்டியே எம்மை தேற வைத்தாய்!
தெம்மாங்கென பாச இசை இசைத்தாய்!
தெய்வம்போல் கேட்டதெல்லாம் கொடுத்தாய்!
தெரிந்தவர்க்கெல்லாம் தேடி உதவினாய்!
தெள்ளமுதாய் சொந்தங்களுக்கு சுவை சேர்த்தாய்!
தெளிவாக கீதையின் சாரம் (ALL RIGHT) இறுதியாய் உரைத்தாய்
தென்னையாய் நாமும் நன்றி செலுத்த காத்திருக்க
தெரியாத இடத்திற்கு தென்றலே நீ சென்றதேனோ?
தென்படுகின்றாய் நீயும் சிவனாய், ராமனாய், லிங்கமாய்!

தும்பளை, புலோலி கிழக்கு,
பருத்தித்துறை. (66883) குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வல்வை சிவகுரு வித்தியாசாலையின் அதிபராகப் பணியாற்றி மருதங்கேணி கோட்டக் கல்வி அதிகாரியாக பதவி உயர்வு பெற்றுச் செல்லும் த.தபேந்திரராஜாவின் சேவை நலன்பாராட்டு விழா கடந்த புதன்கிழமை இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. கோட்டக் கல்வி அதிகாரியாகப் பதவி உயர்வு பெற்றுச் சென்ற த.தபேந்திரராஜாவை வித்தியாசாலை அதிபர் ஆ.சிவநாதன் தலைமையில் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினரும் பழைய மாணவர் சங்கத்தினரும் பெற்றோரும் ஊர்வலமாக அழைத்துச் செல்வதையும் வித்தியலய மாணவர்களின் பாண்ட் வாத்திய அணிவகுப்பையும் முதலிரு படங்களிலும் விழா நாயகன் பாரியார் சகிதம் நிற்பதையும் அருகில் வல்வை வைத்தீஸ்வர ஆலயக் குருக்கள் சிவஸ்ரீ மனோகரக் குருக்கள், வடமராட்சி கல்விப் பணிப்பாளர் எஸ்.செல்வராஜா, வல்வை முத்துமாரி அம்மன் ஆலயக் குருக்கள் சிவஸ்ரீ தண்டபாணிக தேசிகர் ஆகியோர் நிற்பதையும் வடமராட்சிக் கல்விப் பணிப்பாளர் விழா நாயகனை பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதையும் அடுத்துள்ள படங்களில் காணலாம்.

(படங்கள் :சுந்தா)

### யாழ்.மனித உரிமை மீறல்களைக் கட்டுப்படுத்த

# நீதித்துறை எடுக்கும் செயற்பாடுகள் குறித்து ஐ.நா.தூதருக்கு எடுத்துரைப்பு

கொழும்பு, ஒக்.13

குடாநாட்டில் தொடரும் கொலைகள், கடத்தல்கள், காணாமற்போதல் ஆகிய மனித உரிமை மீறல்களை கட்டுப்படுத்துவதற்கு - குறைப்பதற்கு - நீதித்துறை எடுத்துவரும் நடவடிக்கைகள் குறித்து ஐ.நாவின் மனித உரிமைகளுக்கான தூதர் லூயிஸ் ஆர்பர் அம்மையாரிடம் எடுத்துக் கூறப்பட்டது.

நேற்றுமுன்தினம் பிற்பகல் 2.30 மணியளவில் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தலைமையிலான குழு, ஐ.நா. தூதுவரைச் சந்தித்தபோதே இதுகுறித்து அவருக்கு விளக்கமாகத் தெரிவிக்கப்பட்டது.

பிரதம நீதியரசருடன் நீதியமைச்சின் செயலாளரும் புனர்வாழ்வுத் திணைக்கள ஆணையாளருமான கம்லத், யாழ்.மாவட்ட மேல் நீதிமன்ற நீதிபதி பி.சுவர்ணராஜ், யாழ்.மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜா ஆகியோரும் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாண நிலைவரம் மற்றும் நீதிமன்றங்களின் செயற்பாடுகள் தொடர்பாக ஆர்பர் அம்மையார் விவரமாகக் கேட்டறிந் தார்.

கொலைகள், கடத்தல்கள், காணாமற்போதல், உயிர் அச்சுறுத்தல் காரணமாக சரணடைதல் போன்றவற்றை கட்டுப்படுத்த நீதிமன்றங்கள் எடுத்துவரும் செயற்பாடுகளைக் குழுவினர் ஆர்பருக்குத் தெரிவித்தனர். (அ-1)

## நவராத்திரி பூசைகள்

யாழ்ப்பாணம், ஒக்.13

சுழிபுரம் சிவபூமி முதியோர் இல்லத்தில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு ஆறுதிருமுருகன் தலைமையில் நவராத்திரி பூசைகள் நடைபெறவுள்ளன.

இதில் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி அதிபர், மாணவர்களின் சொற்பொழிவுகள் இடம்பெறவுள்ளன.

இதில் விசேட நிகழ்வாக கீதா உபதேசம் சிறப்பு நிகழ்வு இடம்பெறவுள்ளது. சிறப்பு நாட்டிய நாடகமும் இடம்பெறவுள்ளது.

(203)

* * *

கரவெட்டி,ஒக்.13

கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயத்தில் எதிர்வரும் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நவராத்திரி பூசைகள். இடம்பெறவுள்ளன.

அதிபர் இ.இராகவன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் நெல்லியடி கரவெட்டி மக்கள் வங்கி முகாமையாளர் எஸ். சிவஞானசுந்தரம்பிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (203-70)

# போதிய தளபாட வசதிகளின்றி தென்மராட்சி பிரதேச வெளிக்கள உத்தியோகத்தர் சிரமம்

யாழ்ப்பாணம், ஒக்.13

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு போதிய தளபாட வசதி இல்லாததால் பொதுமக்கள் சிரமங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கப்பட்டது.

ஒவ்வொரு புதன்கிழமையும் அனைத்து கிராம அலுவலர்கள் உட்பட வெளிக்கள உத்தியோகத்தர்கள் பிரதேச செயலகத்திற்கு வருகை தருகின்றனர்.

சுமார் 100 வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கென செயலக கேட்போர் கூடத்தில் 2 மேசையும் நான்கு வாங்குகளுமே வைக்கப்பட்டுள்ளன.

சுமார் 12 உத்தியோகத்தர்கள் மட்டுமே அமர்ந்திருந்து கருமமாற்ற முடியும்.

இந்நிலையில் ஓர் உத்தியோகத்தர் தனது கருமத்தை முடிக்கும் வரை ஏனையோர் காத்திருந்து சங்கீதக் கதிரையைப் பிடிப்பது போல் இடம்பிடித்து தமது பணிகளை மேற்கொள்கின்றனர்.

இதனால் உத்தியோகத்தர்களிடம் வரும் பொதுமக்கள் மணிக்கணக்கில் காத்திருக்க வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (203)

### குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

# யாழ்.மாவட்ட மக்களின் இடப்பெயர்வால் புதியவர்கள் பலரின் பெயர்கள் பதியப்படவில்லை

யாழ்ப்பாணம், ஒக்.13

யாழ்.மாவட்ட மக்கள் பெரியளவில் இடப்பெயர்வுகளுக்கு உள்ளாகியுள்ளமையாலும் கடந்த கால வதிவிடத்தின் வாக்காளர் இடாப்புப் பதிவுகள் பற்றிய விவரங்கள் பெற்றுக்கொள்வதில் ஏற்பட்ட சிரமங்கள் காரணமாகவும் பலர் தமது பிள்ளைகளின் பதிவுகளைத் தவறவிட்டுள்ளனர்.

2007 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பில் பெயர்களைச் சேர்க்கும் முகமாக தனிநபர்களின் விண்ணப்பங்கள் ஏற்கும் பணி, யாழ். மாவட்டத்தில் கடந்த இரண்டு மாதத்திற்கு முன்னர் இடம்பெற்றுள்ளன.

இலங்கையில் கடந்த ஆண்டில் சுமார் இரண்டரை லட்சத்திற்கு மேற்பட்ட வாக்காளர்கள் அதிகரித்துள்ளதாக தேர்தல் திணைக்களம் தகவல் வெளியிட்டுள்ளது.

2006 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட புதிய வாக்காளர் இடாப்பு பணிகளைத் தொடர்ந்து இந்த அதிகரிப்புக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

2005ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பின் பிரகாரம் இலங்கையில் வாக்களிக்க ஒரு கோடி 35 லட்சத்து 38 ஆயிரத்து 271 பேர் தகுதி பெற்றவர்களாகக் காணப்பட்டார்கள்.

இதன் அடிப்படையில் 2007ஆம் ஆண்டில் ஒரு கோடியே 37 லட்சத்து 88 ஆயிரத்து 421 ஆக அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

2006 ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பு அச்சிடும் பணிகள் முடிவடைந்துள்ள நிலையில் வாக்காளர் பட்டியல் கிராம அலுவலர்கள், பிரதேச செயலர்கள் மற்றும் மாவட்ட தேர்தல் அலுவலகங்களில் உரிய தமது பதிவுகளை பார்வையிட முடியும் எனவும் பெயர்கள் விடப்பட்டு இருந்தால் அதனைவிட்டு மேன்முறையீட்டை மாவட்டமட்டத்தில் கிராம அலுவலர்கள் மூலம் செய்யலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(203-68)

## நிகழ்வுகள்

யாழப்பாணம்,ஒக்.13

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் சங்கத்தானை பிரதேச மக்களுக்கான இலவச மருத்துவ பரிசோதனை முகாமினை நாளை இத்தியடிப்பிள்ளையார் கோவிலடியில் நடத்தவுள்ளனர்.

கண், நீரிழிவு, வாய்ப்புற்று, தோல், இரத்த அமுக்கம், பொதுமருத்துவம் ஆகிய பரிசோதனைகள் நடத்தப்படவுள்ளன.

கண் பரிசோதனையில் பார்வையில் குறைபாடு காணப்படும் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு மூக்குக்கண்ணாடிகள் இலவசமாக வழங்கப்படவுள்ளதாக கழகச் செயலாளர் லயன் செ.சுப்பிரமணியம் அறிவித்துள்ளார். (203-207)

* * *

யாழ்ப்பாணம்,ஒக்.13

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையும் சண்டிலிப்பாய், சங்கானை கோட்டப் பாடசாலைகளும் இணைந்து நடத்தும் சுகாதார விழிப்புணர்வுக் கண்காட்சி இன்று சனிக்கிழமை தொடக்கம் மூன்று தினங்களுக்கு காலை 8 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை மானிப்பாய் மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைப் பொறுப்பதிகாரி க.தெய்வேந்திரம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் யாழ். அரச அதிபர் கே.கணேஸ் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

(203-100)

* * *

யாழ்ப்பாணம், ஒக்.13

கொக்குவில் இந்துக் கல்லூரியின் விளையாட்டுத்துறை அபிவிருத்திக் கூட்டடம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது என பாடசாலை அதிபர் அ.அகிலதாஸ் தெரிவித்துள்ளார்.

(203)

* * *

யாழ்ப்பாணம், ஒக்.13

கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தின் முன்னாள் அதிபர் திருமதி வசந்திமாலா சிலபாலனின் சேவை நயப்பு வைபவம் இன்று காலை 9மணியளவில் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கடந்த 10 வருடங்களுக்கு மேலாக அதிபராகக் கடமையாற்றிய இவர் பாடசாலையின் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் பல வழிகளிலும் அரும் பாடுபட்டார்.

அதிபர் சா.தியாகலிங்கம் தலைமையில் இந்நிகழ்வு நடைபெறும். (203)

யாழ்ப்பாணம்,ஒக்.13

ஊர்காவற்றுறை லயன்ஸ் கழகத்தால் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு வேலணை சரஸ்வதி மகாவித்தியாலயத்தில் மருத்துவமுகாம் நடத்தப்படவுள்ளது.

பல்வேறு மருத்துவப் பரிசோதனைகள் இந்த முகாமில் நடத்தப்படவுள்ளன.

அத்துடன் போசாக்கு உணவு வழங்கல், சிறுவர், முதியோருக்கு ஆடைகள் வழங்கல், மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்கல், மரம்நடுதல், தலைமைத்துவப் பயிற்சியளித்தல், வீதி பாதுகாப்பு தொடர்பான விளக்கமளித்தல் போன்ற செயற்பான விளக்கமளித்தல் போன்ற செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படவுள்ளன. (203)

யாழ்ப்பாணம், ஒக்.13

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான சிறுவர் அரங்கப் போட்டிகள் எதிர்வரும் 18 ஆம் திகதி சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார்.

(203-207)

* * *

யாழ்ப்பாணம், ஒக்.13

காங்கேசன்துறை மாவட்டசாரணர் கிளைச் சங்கத்தின் 27ஆவது சாரணர் பாசறை விழாவும் குருளைச் சாரணர் வெளிக்களநாளும் இன்று சனிக்கிழமை காலை 8 மணிக்கு மானிப்பாய் இந்துக்கல்லூரியில் இடம்பெறவுள்ளது. (203)

* * *

யாழ்ப்பாணம், ஒக்.13

உலக உளநல நாளை நினைவுகூரும் முகமாக யாழ்.மாவட்டத்தில் இயங்கும் நான்கு உளவள நிறுவனங்கள் யாழ்.பல்கலைக்கழக உளமருத்துவத் துறையுடன் இணைந்து நடத்தும் ''மாசை சஞ்சாரம்'' எனும் உளவியல் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ் பல்கலைக்கழக கைலாச பதிகலையரங்கில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.அரச அதிபர் கே.கணேஸும் சிறப்பு விருந்தினராக உலக சுகாதார நிறுவனத்தில் கடமைபுரியும் வைத்தியகலாநிதி ஜோன் மகோனியும் கலந்துகொள்வர்.

இந்நிகழ்வின் சிறப்பு நிகழ்வாக தவநாதன் றொபேட் குழுவினரின் இன்னிசை நிகழ்வும் இடம்பெறும். (203-86)

# புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர் விவரம்

யாழ்ப்பாணம்,ஒக்.13

கடந்த ஓகஸ்ட் மாதம் நடத்தப்பட்ட தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களின் விவரங்கள் பாடசாலை அதிபர்களால் வெளியிடப்பட்டுள்ளன.

சில பாடசாலைகளின் முடிவுகள் வருமாறு :

**தெல்லிப்பழை தந்தை செல்வா தொடக்க நிலைப் பள்ளி**

பூ.நிஷானி(156), ம.தனுஷன்(150), த.வுவீனா(150), சி.சதீஸ்கா(143)

**அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம்**

ஸ்ரீ.ஜீவிதா(147), த.அஜிந்தன்(145).

**கைதடி முத்துக்குமாரசாமி ம.வி.**

சி.சாரங்கன்(171), ப.கோபிநாத்(157), கோ.பானுகா(155), த.சங்கீத்(146), சி.தருசாலினி(143)

**கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி.**

ச.வானதி(182), செ.சாரங்கன்(166), ஸ்ரீ.கௌசிகா(160), யோ.மயூரி(148)

**நாவற்குழி ம.வி**

மா.சிவரதன்(160), பு.வைஸ்ணவி (158), பா.சுயந்தன்(150), சு.அபிராமி (144)

**தம்பசிட்டி மெ.மி.த.க. பாடசாலை**

உ.ஜெனோசன்(171), சி.வித்தகன் (160), ரா.கஜன்ராஜ்(159), செ.கிருத்திகன்(158),வா.சங்கீதா(150), ச.துவாரகன் (150), த.நிவேதன்[illegible], [illegible] (143), ஜெ.[illegible](141), [illegible] (141).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



2007இல் நடைபெற்ற ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் 140 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த யா/நாவாந்துறை றோ.க.வித்தியாலய மாணவியும் எங்கள் புதல்வியுமான

**அருமசீலன் இருதயசீலி** (துஷா)

அவர்கள் மேலும் பல உயர்வுகள் பெற்று சிறந்து விளங்கப் பரலோக அன்னையை வேண்டுகின்றோம். இவரின் கல்வியை ஊக்குவித்த அதிபர், பிரதி அதிபர், வகுப்பாசிரியர் திருமதி சிவானந்தன் றோகினி ஆகியோருக்கு எமது நன்றிகளைத் தெரிவித்து நிற்கின்றோம்.

17/4, சென்மேரிஸ் வீதி,
நாவாந்துறை வடக்கு,
யாழ்ப்பாணம்.
(66850)

வாழ்த்துவோர்:
அம்மா, அப்பா, தம்பிமார், அன்ரா, சாச்சி, குட்டி அன்ரா, அம்மம்மாமார், அப்பப்பாமார், மாமாமார், சித்தாமார்.



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



2007ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சையில் 158 புள்ளிகள் பெற்றுச் சித்தியடைந்த யாழ்.சென் ஜோண்ஸ் கல்லூரி மாணவன்

**செல்வன் யேசுநாயகம் ஆரன்சன்**

அவர்களை மேலும் பல உயர்வுகள் பெற்றுக் கல்வியிலும் பண்பிலும் உயர்ந்து வாழ வாழ்த்துவதுடன் இவருக்கு ஊக்கமளித்த அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகிறோம்.

36/1, 5ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம். (66863)

வாழ்த்துவோர்:
அப்பா, அம்மா, அக்கா,
அண்ணா, தங்கை.



## சேவை நலன் பாராட்டு



**உயர்திரு. து.பாலசுந்தரம்**
(அதிபர், SLPS-2-II)

எமது பாடசாலையில் கடமையாற்றி இன்று (13.10.2007) சனிக்கிழமை தனது ஐம்பத்தைந்தாவது அகவையில் ஓய்வுபெற்றுச் செல்லும் அதிபர் அவர்களை வாழ்த்துகின்றோம்.

**சேவைக்கால விவரம்**

| | |
|---|---|
| ப/பம்பரகம மகா வித்தியாலயம் | 1977.06.03-1979.03.04 உதவி ஆசிரியர் |
| ப/புனித சூசையப்பர் கல்லூரி | 1979.03.15-1984.04.02 பட்டதாரி ஆசிரியர் |
| ப/பண்டாரவளை தமிழ் ம.வித்தி. | 1984.04.03-1987.05.22 பட்டதாரி ஆசிரியர் |
| யா/நாவற்குழி மகா வித்தியாலயம் | 1987.05.23-1994.02.10 பட்டதாரி ஆசிரியர் |
| யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி | 1994.02.01-1994.03.31 டிப்ளோமா பட்டதாரி |
| பருத்தித்துறை கல்விக் கோட்டம் | 1994.04.01-1995.10.25 முதன்மை ஆசிரியர் |
| யா/மறவன்புலோ சகலகலாவல்லி வித்தி. | 1995.10.26-1997.06.08 டிப்.பட்.ஆசிரியர் |
| யா/கோயிலாக்கண்டி மகாலட்சுமி வித்தி. | 1997.06.09-1999.02.02 பதில் அதிபர் |
| யா/கைதடி விக்னேஸ்வரா வித்தி. | 1999.03.03-2005.02.20 அதிபர் |
| யா/மந்துவில் றோ.க.த.க.பாடசாலை | 2005.02.21-2007.10.12 அதிபர் |

ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/மந்துவில் றோ.க.த.க. பாடசாலை.
(சி/53385)



## சாவகச்சேரி துர்க்காதேவி திருமண மண்டபம்

ஆயிரம் பேர் அமரக்கூடியதும் ருசியான உணவும், அமைதியான சூழ்நிலையும், வாகனங்கள் தரிக்க வசதி உள்ளதுமான மண்டபம்.
திருமணமா, பூப்புனித நீராட்டு விழாவா சகல மங்கள வைபவங்களுக்கும் குறைந்த கட்டணங்களில் முன்கூட்டியே தேவஸ்தானத்தில் பதிவுசெய்து கொள்ளவும்.

(66709) **துர்க்காதேவி தேவஸ்தானம்.**



## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 24 ✱ 12 ✱ 1945



உதிர்வு 13 ✱ 09 ✱ 2007

**திருமதி மகாலிங்கம் இராஜேஸ்வரி**

அன்பின் பிறப்பிடமாய் பண்பின் ஒளி விளக்காய்
பாசத்தின் உறைவிடமாய் எங்கள் குலவிளக்காய்
ஒளி தந்த அன்புத் தெய்வமே!
ஈடுசெய்ய முடியாத உங்கள்
இழப்பினால் கதி கலங்கி நிற்கின்றோம்.

கடந்த 13.09.2007 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் இறுதிச்சடங்கில் பங்குபற்றி அனைத்து உதவிகளும் புரிந்து எமது ஆறாத் துயரில் பங்குகொண்ட அனைத்து அன்புள்ளங்களுக்கும் நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்வதுடன் இன்று (13.10.2007) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

C.P.M லேன்,
நவாலி தெற்கு, மானிப்பாய். (66862)

மகாலிங்கம்
குடும்பத்தினர்.


# கசிப்பு வைத்திருந்த நபருக்கு சுன்னாகத்தில் 80 ஆயிரம் அபராதம்

வலி.வடக்கு,ஒக்.13

சுன்னாகப் பகுதியில் 48 போத்தல் கசிப்பு வைத்திருந்த நபருக்கு 80 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

சுன்னாகம் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நபர் மல்லாகம் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட போது நீதிபதி திருமதி சறோஜினி இளங்கோவன் இவ்வாறு அபராதம் விதித்துள்ளார்.

அபராதம் கட்டத்தவறின் 9மாதம் சிறைத் தண்டனை அனுபவிக்கவேண்டும் எனவும் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. (203-86)

# சாவகச்சேரி வைத்தியசாலையில் புதிய பற்சிகிச்சை நிபுணர்

யாழ்ப்பாணம்,ஒக்.13

சாவகச்சேரி மாவட்ட மருத்துவ மனையின் பற்சிகிச்சை நிபுணராக மருத்துவர் வீ.ஆர்.டேவிட் பொறுப்பேற்றுள்ளார்.

மருத்துவமனையில் பற்சிகிச்சை நிபுணராகக் கடமையாற்றிய ச.பாலகுமார் கொழும்புக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றதையடுத்து இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

வாரத்தில் புதன்கிழமை தவிர்ந்த ஏனைய நாள்களில் பற்சிகிச்சை நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (203-207)


## வாடகைக்கு

அச்சுவேலி பிரதான வீதியில் (பஸ் நிலையம்) இரு கடைகள் வாடகைக்கு உண்டு.
தொடர்பு: T.துரைராஜன் T.P: 0602212223

## கோழிக்குஞ்சு விற்பனை

புறொயிலர் குஞ்சு 20.10.2007 பெற்றுக்கொள்ளலாம். முற்பதிவு செய்யவும். எம்மிடம் குஞ்சு எடுப்பவர்களிடம் மீண்டும் கோழி எடுக்கப்படும்.
நல்லூர் பாம், 19,முருகேசர் லேன்.

## விற்பனைக்கு

உடன் சுத்தம் செய்யப்பட்ட புறொயிலர் கோழி 1Kg - 550/- மட்டும்.
**தாசன் பாம்**
No.: 158/4, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (சி/53955)

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

பொமேரியன் பெரிய, சிறிய குட்டிகள் வெள்ளை, கறுப்பு நிறங்களில் உண்டு. தடுப்பு ஊசிகள் போடப்பட்டது.
தொடர்பு: றோசாத்தோட்டம்,
தலங்காவற் பிள்ளையார் வீதி,
திருநெல்வேலி மேற்கு. (66849)

## மணப்பெண் தேவை

இந்து கௌரவ குடும்பம், 1973, சதயம் கிரகபாவம் 10¾, 5' 2" உயரம், B.A. பட்டதாரி ஆசிரியருக்கும், 1971 பூரட்டாதி கும்பராசி, 7இல் செவ்வாய் 42¼ கிரகபாவம், 5' 6" உயரம், B.A. (Hons) ஆசிரியருக்கும் அழகான ஆசிரியை அரச பணி வகிக்கும் மணப்பெண்கள் தேவை. மேலும் கொழும்பில் பணிபுரியும் டாக்டர், எஞ்சினியர், எக்கவுண்டர், அரச, தனியார் துறைகளில் உயர் பதவி வகிக்கும் மணமகன்களுக்கும் தகுதியான மணப் பெண்கள் தேவை. கொழும்பில் வீடு எதிர்பார்க்கப்படும்.

தொடர்புக்கு:- சிவாலயா சுவதேச திருமண நிலையம்,
389C, இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.
T.P:- 0775834982
கிளைகள்: ஸ்ரேசன் றோட் (திவ்வியா பேக்கரி அருகில்),சுன்னாகம். (66810)



## Medecins Sans Frontieres (MSF) -France

MSF is an International independent humanitarian medical aid agency committed two objectives: providing medical aid wherever needed, regardless of race, religion, politics or sex and raising awareness of the plight of the people we help.

**VACANCY**

**POSITION: Medical Translator (Female)**

We are looking a skilled, energetic and dynamic person to suit the above position to our office in Point Pedro. The Translator will work with the medical team in the project of hospitals.

**Skills required:**
* Excellent communication skill in English.
* Good interpersonal skill.
* Previous working experience in Medical activities would be an advantageous.

Please forward your **CV** along with contact phone numbers to the following address on or before **20th October 2007.**

**Field Coordinator**
Medecins Sans Frontieres (MSF) - France
Manthikai,
Point Pedro.



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



2007இல் நடைபெற்ற ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் 163 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை மாணவன்

**செல்வன் கண்ணதாசன் பிரியங்கன்**

அவர்களை கல்வியில் மேலும் சிறப்புகள் பெற வாழ்த்துவதுடன் கல்வி கற்பித்த பாடசாலை அதிபர், ஆசிரியர்களையும் தனியார் கல்வி நிறுவன ஆசிரியர் **க.தவயோகராஜா** அவர்களையும் மனதார வாழ்த்துகின்றோம்.

மீசாலை கிழக்கு,
மீசாலை.
(66830)

வாழ்த்துவோர்:
அம்மா, அப்பா, அம்மம்மா, அம்மப்பா, மாமா, மாமி, சித்தா, சித்தப்பா (லண்டன்), தருமு மாமா, மங்களம் அன்ரி, அக்கமார் கார்த்திகா, வாகினி, கஸ்தூரி.



## பாராட்டி வாழ்த்து

2007ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் 171 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த
**ஏழாலை சைவசன்மார்க்க வித்தியாலய** மாணவி



**செல்வி இரவீந்திரன் விஷ்ணுப்பிரியா**

மேலும் பல சிறப்புகள் பெற்று சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துவதுடன் இவருக்கு ஊக்கம் கொடுத்த அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஏழாலை மேற்கு.
(66326)

வாழ்த்துவோர்:
பெரிய மாமா குடும்பம், சித்தி குடும்பம், சின்னமாமா குடும்பம், அம்மம்மா, சின்னக்கா.



புதிய கிளை நிறுவனத்துடன் நாம்...!

**COMPUTER EXPRESS**
ஒருவாரகால முழுநேர கற்கைநெறிகள்

Jaffna Head office
No 15,
Sirambiyadi Lane
(off Stanly Rd.)
021-222 8250,
0777 222422

Branch office
No 167,
Kasthuriyar Rd,
(Near Uthayan Publication)
Jaffna.

## Diploma in Hardware Engineering

❖ Assembling ❖ Upgrading ❖ Troubleshooting ❖ Fault Finding ❖ Repairing ❖ Servicing ❖ Software Installation ❖ Configuring ❖ Networking Etc..
Course Fee :2000/=

## Diploma in Computerized Accounting

ACCPAC + Quick Books Premier + MYOB ஆகிய முன்னணி Accounting Software களினூடாக கற்பிக்கப்படும்.
Course Fee :3500/=

## Diploma in Video Mixing

❖ Introduction to Computer ❖ Operating System(Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Adobe Premier ❖ Cool3D Studio ❖ Pinnacle Studio ❖ VCD Cutter.
Course Fee :3000/=

## Diploma in Graphic Designing

❖ Introduction to Computer ❖ Operating System(Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Corel Draw ❖ Cool3D Studio ❖ Macro media Flash MX
Course Fee :2000/=

ஒரே நாளில் ஆரம்பம் – Batch I-15/10/2007
Batch II-22/10/2007

ஒவ்வொரு வாரமும் ஆரம்பமாகின்றன.



## ஓராண்டு நினைவஞ்சலி

**அமரர் சின்னத்துரை அருந்தவநாதன்** (J.P)
(காமாட்சி அம்பாள் சனசமூக நிலைய முன்னாள் தலைவர்)



மண்ணுலகு: 05✱04✱1939
விண்ணுலகு: 24✱09✱2006
திதி: துதியை 13.10.2007

அப்பா, அப்பா! அன்புத் தெய்வமே!
நெஞ்சம் துடிக்குதப்பா! நினைவு தடுமாறுதப்பா!
உம் பிரிவை எண்ணி நிலைகுலைந்து பரிதவிக்கும்
அம்மாவுடன் கூடி, நான்கு பிள்ளை கண்களிலும்
உம் குருதி ஓடுதப்பா
அன்புமொழி பேசி அரவணைத்த பேரப்பிள்ளைகள்
அப்புச்சியைக் காணாமல் தவிக்கின்றனர் அப்பா.

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி. (66667)

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.



## மரண அறிவித்தல்



**வரதராஜா இராஜ்குமார்**

பொன்னாலை, சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் சிறுவிளான், இளவாலையை வசிப்பிடமாகவும் தற்போது திருநெல்வேலி கிழக்கில் வசித்து வந்தவருமாகிய வரதராஜா இராஜ்குமார் அவர்கள் 10.10.2007 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வரதராசா மற்றும் புவனேஸ்வரி தம்பதியரின் அன்புப் புதல்வரும் காலஞ்சென்ற வைரமுத்து - கனகம்மா தம்பதியரின் மருமகனும் தர்மசோதியின் அன்புக் கணவரும் ரகுராஜ், ரவிராஜ் (யாழ்.இந்துக் கல்லூரி - 2008 A/L), புவிராஜ் (யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரி - 2009 A/L) ஆகியோரின் பாசமிகு தந்தையும் விஜயகுமார், சந்திரா, சித்திரா ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 10.10.2007 அன்று திருநெல்வேலி இந்துமயானத்தில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

திருநெல்வேலி கிழக்கு,
திருநெல்வேலி. (66867)

தகவல்:
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்: 222 9944

# இலங்கையில் அமைதி திரும்ப மேற்குலகப் பங்களிப்பு அவசியம்

மோசமடைந்துவரும் இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாகக் கருத்து வெளியிட்டுவரும் பல்வேறு தரப்புகளும் இவ் விடயத்தில் சர்வதேச சமூகத்தின் அசிரத்தைப் போக்கை - உதாசீனசெயற்பாட்டை - தொடர்ந்தும் கண்டித்தும், விமர்சித்தும், ஆதங்கம் தெரிவித்தும் வருகின்றமையை அவதானிக்க முடிகின்றது.

இலங்கை நிலைமை தொடர்பாக சர்வதேச பிரசித்தி பெற்ற அமைப்பான 'றோய்ட்டர்ஸ்' செய்தி நிறுவனமும் அதன் அண்மைய ஆய்வுக்கட்டுரை ஒன்றில் இதனைச் சுட்டிக்காட்டியிருக்கின்றது.

*''2002 ஆம் ஆண்டு உருவான போர்நிறுத்த ஒப்பந்தம் கடந்த ஆண்டில் முற்றாக முறிவடைந்த பின்னர் இதுவரை ஐயாயிரம் பேர் வரை இலங்கையில் கொல்லப்பட்டுள்ளனர் என்று கூறப்படுகின்றது. இது சர்வதேசத்தின் அதிக கவனிப்புக்கும் சிரத்தைக்கும் உள்ளான சூடானில் டாபூர் பிரதேசத்தில் இதே காலப்பகுதியில் கொலையுண்ட மக்கள் எண்ணிக்கையை விட அதிகமாகும். ஆனால் இலங்கை விவகாரத்தில் சர்வதேச சமூகத்தின் அரசியல் அழுத்தங்கள் மிகக் குறைவானது. அதேபோல சர்வதேச சமூகத்தின் ஈடுபாடும் மட்டுப்படுத்தப்பட்டது.''* - இவ்வாறு அந்த ஆய்வுக் கட்டுரை தெரிவிக்கின்றது.

கடந்த புதன், வியாழன் ஆகிய நாள்களில் லண்டன் நகரில் இலங்கை விவகாரம் தொடர்பாக நடைபெற்ற இரண்டு முக்கிய கருத்தரங்குகளிலும் கூட இதே கருத்தே பிரஸ்தாபிக்கப்பட்டது.

வியாழனன்று இரவு, லண்டன் நகர மத்தியில் 'புறொண்ட் லைன் கிளப்' கட்டடத்தில் இலங்கையில் மனித உரிமைகள் தொடர்பான ஒரு கருத்தரங்கை 'தத்தமது நாடுகளிலிருந்து வெளியேற்றப்பட்டு லண்டனில் தங்கியிருக்கும் பத்திரிகையாளர்களின் அமைப்பு' நடத்தியது. இலங்கையில் பத்திரிகையாளர்கள் மற்றும் ஊடகத் தரப்பினர் மீது, எல்லையற்ற விதத்தில் பிரயோகிக்கப்படும் அழுத்தங்கள், அச்சுறுத்தல் கள், செய்தி சேகரிப்பில் நேரும் இடர்பாடுகள் குறித்து இக்கருத்தரங்கில் விரிவாக ஆராயப்பட்டது. சிறுபான்மையினரான தமிழர்கள் அதிகம் வாழும் தமிழர் தாயகப் பிரதேசத்தின் உண்மை நிலைவரத்தை வெளிப்படுத்த முடியாத இக்கட்டு இருப்பது குறித்தும், அங்கு செய்தியாளர்கள் தங்கியிருந்து தமது பணிகளைச் செய்ய முடியாத அளவுக்கு ஆபத்து நிலவுவது பற்றியும் கருத்தரங்கில் விரிவாகப் பேசப்பட்டது.

உள்நாட்டுச் செய்தியாளர்கள் தமது பணியைச் செய்ய முடியாத நிலையில் சர்வதேச ஊடகங்களின் செய்தியாளர்கள் இவ்விவகாரத்தில் அதிக கவனம் செலுத்த முடியும், செலுத்த வேண்டும் என இக்கருத்தரங்கில் சுட்டிக்காட்டப்பட்டது. ஆனாலும் இலங்கையில் பற்றியெரியும் மோசமான நிலைமையை சர்வதேச சமூகத்துக்கு எடுத்துரைத்து, அதன் கவனத்தை இலங்கையின்பால் திரும்ப வைப்பதில் சர்வதேச ஊடகங்கள் காத்திரமான பங்களிப்பை வழங்கவில்லை என்பதே அக்கருத்தரங்கில் பலரதும் ஆதங்கமாக வெளிப்படுத்தப்பட்டது.

மியன்மாரில் பௌத்த துறவிகள் தலைமையில் ஜனநாயக உரிமைகள் கோரி நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போது ஜப்பான் நாட்டுப் பத்திரிகையாளர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டமை குறித்து அளவுக்கு அதிகமான முக்கியத்துவம் கொடுத்து பலரது கவனத்தையும் இழுத்தெடுக்கும் விதத்தில் செய்திகளை வெளியிட்ட மேற்குலகம், யாழ்ப்பாணத்திலோ, கிழக்கிலோ ஓர் ஊடகவியலாளன் கொல்லப்படும்போது அது பற்றிய செய்தியை அமுக்கி வாசிக்கின்றன. இலங்கையில் ஊடகங்களுக்கு எதிரான அழுத்தம் எல்லை மீறி கட்டவிழ்ந்திருப்பதற்கு சர்வதேச சமூகத்தினதும், மேற்குலக ஊடகங்களினதும் இத்தகைய அசிரத்தைப் போக்கே காரணம் என்பது, கடந்த புதனன்று பிரிட்டிஷ் நாடாளுமன்றக் கட்டடத்தில் இடம்பெற்ற - பத்திரிகையாளர்கள் தொடர்பான - கலந்துரையாடலில் சுட்டிக்காட்டப்பட்டது. 'நிபுணத்துவம், சமாதானச் செய்திகளை அறிக்கையிடல், பத்திரிகையாளர் பாதுகாப்பு' என்ற தலைப்பில் இலங்கை விவகாரம் குறித்து இந்தக் கருத்தரங்கில் விரிவாக ஆராயப்பட்டது. சர்வதேச ஊடக அமைப்புகளின் பல்வேறு பிரதிநிதிகளும் கலந்துகொண்ட இந்தச் சந்திப்பில் இலங்கையில் ஊடகங்களின் அவலநிலை குறித்து சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்ப்பதில் மேற்குலக ஊடகங்கள் சிரத்தை காட்டாமல் இருக்கும் போக்கு கண்டிக்கப்பட்டது.

மேற்குலகின் பொறுப்பற்ற போக்கே இலங்கையின் இன்றைய அவல நிலைக்கு வித்து; மூலம்.

ஆயிரத்து ஐந்நூறுகளின் ஆரம்பத்தில் அந்நியரால் இலங்கை ஆக்கிரமிக்கப்படும்வரை இத்தீவில் தமிழர் தேசமும், சிங்கள தேசமும் தனித்தனி இறைமையுள்ள நாடுகளாக - வெவ்வேறான ஆட்சிகளின் கீழ் - வேறுபட்டே இருந்தன.

தனியான மொழி, தனியான பண்பாடு, தனித்துவமான வேறுபட்ட தாயகம், தனியான வழக்காறுகள் என்று இருந்த இரண்டு தேசங்களை முதலில் ஆக்கிரமித்து ஆட்சி செய்த போர்த்துக்கேயரும் சரி ஒல்லாந்தரும் சரி தனித்தனி நிர்வாகப் பிரதேசங்களாகவே அவற்றைத் தமது ஆளுமைக்கு உட்படுத்தியிருந்தனர். தமிழர் தேசம், சிங்களவர் தேசம் என்ற தனித் தாயகங்களின் இறைமையையும் அவர்கள் மதித்தனர்.

ஆனால் பின்னர் இலங்கைத் தீவை ஆக்கிரமித்த பிரித்தானியர்கள் 1832 இல் தமது நிர்வாக வசதிக்காக இலங்கைத் தீவை ஒரு கட்டமைப்புக்குள் கொண்டுவந்தனர். ஆங்கிலேயரிடம் அடிமைப்பட்டிருந்த சமயம் தமிழர் தேசம் முற்றாக சிங்கள தேசத்துடன் இணைக்கப்பட்டது. அதன் பின்பு 1948 இல் ஆங்கிலேயர் இந்தத் தீவை விட்டு வெளியேறியபோது, தமிழர் தேசத்தின் இறைமையை, தீவின் பெரும்பான்மையினரான சிங்களவரிடம் கையளித்துச்செல்ல - அதுவரை மேற்குலக அந்நியரிடம் அடிமைப்பட்டிருந்த தமிழர் தாயகத்தின் இறைமை, சிங்களப் பெரும்பான்மையினரிடம் சிறை வைக்கப்பட்டது.

அந்தச் சிறை மீட்புக்கான - தமிழரின் விடுதலைக்கான - உரிமைகளை மீள சுவீகரிப்பதற்கான போராட்டமே இன்று இலங்கைத் தீவைப் பெரும் இரத்தக் களரிக்குள் - வன்முறைப் புயலுக்குள் - மோசமான மனித உரிமை மீறல் கொடூரத்துக்குள் - ஆழ்த்தி நிற்கின்றது.

ஆகவே, இந்த அவல நிலைக்குள் இலங்கைத் தீவை ஆழ்த் தக் காரணமானோர் - வித்திட்டோர் - அதிலிருந்து இந்த அழகிய தீவை மீட்டெடுப்பதற்கும், அடிமைப்படுத்தப்பட்ட தமிழர்களுக்கு மீட்சியைப் பெற்றுக்கொடுக்கவும், ஆவன செய்யவேண்டும் என்று வற்புறுத்துவதில் தவறேதும் இல்லை.

# விலைப்பட்டியல்களைக் காட்சிப்படுத்தாத 32 வர்த்தகர்கள் அதிகாரிகளிடம் சிக்கினர்!

## யாழ். நகரம் மற்றும் வடமராட்சிப் பகுதிகளில்

யாழ்ப்பாணம், ஒக். 13

யாழ்ப்பாணம் நகரம், வடமராட்சிப் பிரதேசங்களில் கடந்த செவ்வாய் மற்றும் புதன்கிழமைகளில் மேற்கொள்ளப்பட்ட திடீர் பரிசோதனைகளின் போது விலைப்பட்டியல்கள் வைக்கத் தவறிய 32 வர்த்தகர்கள் சிக்கினர். இவர்கள் அனைவரும் யாழ். செயலகத் திற்கு நேற்று அழைக்கப்பட்டு அறிவுறுத்தப்பட்டனர்.

வர்த்தக நிலையங்கள் அனைத்திலும் விலைப்பட்டியல்கள் காட்சிப்படுத்தப்படவேண்டும் என அரச அதிபராலும் வணிகர் கழகத்தினராலும் அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டிருந்தன. எனினும் சில வர்த்தக நிலையங்கள் அந்த அறிவுறுத்தலைப் பின்பற்றுவதில்லை எனத் தெரிவிக்கப்பட்டதையடுத்து கடந்த செவ்வாய் மற்றும் புதன்கிழமைகளில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் திடீர் பரிசோதனைகளை மேற்கொண்டனர். அதன்போது விலைப்பட்டியல்கள் வைக்கத் தவறிய 32 வர்த்தகர்கள் சிக்கினர்.

நேற்று யாழ். செயலகத்தில் யாழ். வணிகர் கழகப் பிரதிநிதிகளுடன் பொருள்களின் விநியோகம் தொடர்பாக நடத்தப்பட்ட கலந்துரையாடலின்போது குறிப்பிட்ட வர்த்தகர்களும் அழைக்கப்பட்டு அரச அதிபரால் அறிவுறுத்தப்பட்டனர்.

இவ்வாறான வர்த்தகர்களின் செயற்பாடுகள் பாவனையாளர் பாதுகாப்புச் சபைச் சட்டத்திற்கு முரணாக இருப்பதாகவும், இறுதித் தீர்மானம் தொடர்பாகச் சம்பந்தப்பட்ட பிரதேச நீதிபதிகளுடன் கலந்தாலோசித்த பின்பு அறிவிப்பதாகவும் அரச அதிபரால் சம்பந்தப்பட்ட வர்த்தகர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறான திடீர் பரிசோதனைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படும் என்றும், சட்டத்திற்கு முரணாகச் செயற்படும் அனைத்து வர்த்தகர்களுக்கும் எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அரச அதிபர் தெரிவித்தார்.

மேற்படி கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

* தனியார் துறையினரால் யாழ்ப்பாணத்திற்கு எடுத்துவரப்படும் பொருள்களுக்கான விலைகளை யாழ். வணிகர் கழகம், வர்த்தகத் தொழில்துறை மன்றம் ஆகியவற்றினால் நிர்ணயித்து விவரப்பட்டியல் அரசாங்க அதிபருக்கு இரண்டு தினங்களுக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
* இவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட விலையில் பொருள்கள் விற்பனை செய்யப்படுவதனை வணிகர் கழகமும், வர்த்தக தொழில்துறை மன்றமும் உத்தரவாதப்படுத்திக் கொள்ளவேண்டும்.
* பாவனையாளரின் பார்வைக்குத் தெளிவாகத் தெரியக்கூடிய விதத்தில் அத்தியாவசியமான சகல பொருள்களினதும் விலைப்பட்டியல் வைக்கப்படவேண்டும். விலையை அதிகரிக்கலாம் எனக் கருதி எந்தவொரு பொருளையும் பதுக்கிவைத்தல் ஆகாது.
* விற்பனை நிலையத்தில் வைக்கப்பட்டிருக்கும் பொருள்கள் எதனையும் பாவனையாளர்களுக்கு விற்பனை செய்ய மறுத்தல் ஆகாது. அவ்வாறு மறுக்கும் பட்சத்தில் அப்பொருள்கள் பறிமுதல் செய்யப்படும்.
* குறித்த விலைக்கு மேலாகப் பொருள்களை விற்பனை செய்யும் வியாபாரிகளுக்கு எதிராகப் பாவனையாளர் அதிகார சபை அதிகாரிகளினால் நீதிமன்றத்தின் ஊடாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறானவர்களுக்கு எச்சந்தர்ப்பத்திலும் மன்னிப்பு வழங்கப்படமாட்டாது.
* மொத்த வியாபாரிகளிடமிருந்து சில்லறை வியாபாரிகள் பொருள்களைப் பெற்றுக்கொள்ளும் போது பெயர் குறிப்பிட்ட பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். அவ்வாறு பெயர் குறித்த பற்றுச்சீட்டு வழங்காத பட்சத்தில் அது தொடர்பாக வணிகர் கழகத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட வேண்டும்.

# ஆயுதம் வைத்திருந்ததாகப் பெண் ஒருவர் குருநகரில் நேற்றுக் கைதானார்

யாழ்ப்பாணம், ஒக். 13

குருநகர் பகுதியில் வீட்டில் ஆயுதங்கள் வைத்திருந்ததாக சந்தேகிக்கப்படும் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நாற்பத்தைந்து வயது மதிக்கத்தக்க பிரஸ்தாப பெண் யாழ். பொலிஸாரால் யாழ். பதில் நீதிவான் மு. திருநாவுக்கரசு முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார்.

பிரஸ்தாப பெண்ணை 30 நாள்கள் தடுத்து வைத்து விசாரணை செய்வதற்குத் தடுப்பு உத்தரவு வழங்க வேண்டும் என்று பொலிஸார் நீதிவானிடம் கோரினர்.

தடுப்பு உத்தரவு வழங்க தேவையான ஆவணங்களை எதிர்வரும் திங்கட்கிழமை சமர்ப்பித்தால், அது பற்றி நீதிமன்றம் பலிசீலிக்கும் என்று நீதிவான் அறிவித்தார். (அ-1)

# வடக்கு உள்ளூராட்சித் தேர்தல்களுக்கான விசேட ஏற்பாடுகளுக்கு உயர்நீதிமன்றம் அனுமதி

கொழும்பு, ஒக். 13

வடக்கில் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவதற்கான உள்ளூராட்சி அதிகார சபையின் விசேட ஏற்பாடுகள் முரணானவை அல்ல என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம்.லொக்கு பண்டார நேற்று நாடாளுமன்றில் இதனைத் தெரிவித்தார்.

யாழ். மாநகரசபை, ஐந்து நகரசபைகள் மற்றும் 27 பிரதேச சபைகள் உட்பட 33 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை நடத்துவதற்காக உருவாக்கப்பட்ட இந்த உள்ளூராட்சி அதிகார சபை விசேட சட்டமூலம் தொடர்பாக ஜனாதிபதி, உயர்நீதிமன்றத்தின் கருத்தை நாடியிருந்தார்.

10 ஆம் திகதி இச்சட்டமூலம் நீதியரசர் சரத் என் சில்வா, உயர்நீதிமன்ற நீதிபதிகள் என்.ஈ.திஸ்ஸநாயக்க மற்றும் ஆர். ஏ.என்.ஜி. அமரதுங்க ஆகியோர் முன்னிலையில் எடுக்கப்பட்டு அது அரச மைப்புக்கு முரணானதல்ல என்று தீர்ப்பு வழங்கப்பட்டது.

மேற்படி உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் முறையே 30.07.2006, 30.06.2007 மற்றும் 29.02.2008 ஆகிய திகதிகளுக்கு ஒத்திவைக்கப்பட்டன.

இத் தேர்தலில் வாக்களிக்க குடா நாட்டில் புதிதாக 8,727 பேர் தகுதி பெற்றுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

# அமெரிக்க, பிரிட்டன், ஜேர்மன் தூதர்கள் இலங்கை உள்விவகாரத்தில் தலையீடு

## அரசுக்கு புலனாய்வுப் பிரிவு எச்சரிக்கை

கொழும்பு, ஒக். 13

இலங்கைக்கான அமெரிக்க, பிரித்தானிய மற்றும் ஜேர்மன் தூதர்கள் இலங்கையின் உள்விவகாரங்களில் நேரடியாகத் தலையிடுகின்றனர் என பாதுகாப்புப் புலனாய்வுப் பிரிவினால் அரசுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக கொழும்பிலிருந்து வெளிவரும் சிங்கள நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

நாட்டின் பாதுகாப்பு மற்றும் உட்பிணக்குகளில் தலையிடுவதற்கும் அவற்றை விமர்சிப்பதற்கும் வெளிநாட்டுத் தூதர்களுக்கு உரிமையில்லாத போதிலும் இம்மூவரும் தொடர்ந்தும் இந்நாட்டு விவகாரங்களை பாரிய குற்றச்சாட்டுகளுக்கு உட்படுத்தி பாதுகாப்புப் படையினருக்கும் சங்கடமான நிலையை ஏற்படுத்தி வருகின்றனர் என் புலனாய்வுப் பிரிவினால் பாதுகாப்புச் செயலாளருக்கும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பிரித்தானிய வெளிவிவகார அமைச்சினால் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள மற்றும் ஓய்வு பெற்றுச்சென்ற தூதர்களுக்கு சர்வதேசப் பிரச்சினைகள் தொடர்பாக விமர்சிப்பதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ள போதிலும் கொழும்பிலுள்ள பிரித்தானியத் தூதர் அந்த அறிவுரைகளை மீறி வருகிறாரென புலனாய்வுப்பிரிவுப் பேச்சாளர் ஒருவர் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

"இது மிகவும் பாரதூரமான ஒரு பிரச்சினையாகும். இந்நாட்டின் தேசிய பாதுகாப்பு மற்றும் அரசியல் பிரச்சினைகளிலும் கூட இத்தூதர்கள் தலையிட்டு வருகின்றனர். இந்நிலைமை தொடர்ந்தால் பாதுகாப்புப் படை நடவடிக்கைகளுக்கும் பிரச்சினை தோன்றும். ஜேர்மன் தூதர் அண்மையில் படை நடவடிக்கைகளை நிறுத்துமாறு கூறியிருக்கின்றார் - என்று அப் பேச்சாளர் தெரிவித்தார். (சி)

## நாளை

| | |
|---|---|
| புரட்டாதி - 27 | :ஞாயிற்றுக்கிழமை 14.10.2007 |
| திதி : திருதியை | பி.ப. 04.14 |
| நட்சத்திரம் : | விசாகம் மாலை 06.11 |
| சுபநேரம் | : 09.02 - 10.32 |
| ராகுகாலம் | : 04.32 - 06.02 |

# குருநகர் இறக்குதுறைப் பகுதியில் நேற்றுக்காலை இளைஞன் சுட்டுக்கொலை!

குருநகர், ஒக். 13

குருநகர் இறங்குதுறைக்கும் கொலை விளக்கி மாதா தேவாலயத்துக்கும் இடைப்பட்ட கடற்கரைப் பகுதியில் - மக்கள் குடியமர அனுமதிக்கப்படாத பகுதியில் - நடமாடிய இளைஞர் ஒருவர் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இச்சம்பவம் நேற்றுக்காலை 9.30 மணியளவில் இடம்பெற்றது.

யாழ். பதில் நீதிவான் மு. திருநாவுக்கரசு சம்பவ இடத்தில் விசாரணைகளை மேற்கொண்டார்.

அந்தப் பகுதியில் உள்ள பாழடைந்த வீடு ஒன்றில் பதுங்கியிருந்த வேளை அவர் சுடப்பட்டார் என்றும் அவரிடம் இருந்து கிரனேட் மற்றும் சயனைட் குப்பி, இலக்கத்தகடு ஆகியன மீட்கப்பட்டன என்றும் விசாரணையின்போது படையினர் தெரிவித்தனர்.

சடலத்தை இனங்காண்பதற்காக யாழ். ஆஸ்பத்திரியில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

*மாலையில் சுற்றிவளைப்பு*

அதேவேளை -

குருநகர் தண்ணீர்தாங்கியடியில் இருந்து சென். றோக் சனசமூக நிலையம் வரையான பகுதி நேற்று மாலை 6 மணிக்கு திடீரென சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

வீடுவீடாக குடும்பப் பதிவு அட்டைகள் பரிசீலிக்கப்பட்ட பின் 55 வயதுக்கு உட்பட் ஆண்கள் சென்.றோக் சனசமூக நிலையத்துக்கு கூட்டிச் செல்லப்பட்டு விசாரிக்கப்பட்ட பின் விடுவிக்கப்பட்டனர். (அ-1-51)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவுகளை மீட்டுத் தருமாறு அழுத மக்கள் உணர்ச்சி மீறிக் கண்ணீர் மல்கினார் ஆர்பர்!

யாழ்ப்பாணம், ஒக்.13

காணமற்போன, கடத்தப்பட்ட தமது உறவுகளை மீட்டுத்தருமாறு கண்ணீர் மல்க பெரும் குரலில் அழுது கோரினார்கள் நூற்றுக்கணக்கான பெண்கள்.

அவர்களின் சோகக்கதைகளைக் கேட்டு கண்ணீர் சிந்தினார் ஐ.நா.வின் மனித உரிமைகளுக்கான தூதர் லூயிஸ் ஆர்பர் அம்மையார்.

இந்த சோகக்காட்சி நேற்று பிற்பகல் 3.10 மணிக்கு யாழ். ஆயர் இல்லத்துக்கு அருகில் பெரிய கோவிலில் அரங்கேறியது.

ஆர்பர் அம்மையாரை பாதிக்கப்பட்ட மக்கள் சந்திக்க முடியாத வாறு பாதுகாப்பு இறுக்கப்பட்ட போதிலும் ஒருவாறு பெரிய கோவிலுக்குள் நுழைந்த நூற்றுக்கும் மேற்பட்ட பெண்கள் பல மணிநேரம் காத்திருந்து இறுதியில் ஆர்பரைச் சந்தித்தனர்.

பெரிய கோவிலின் பிரதான கதவு மூடப்பட்டு, உள்ளேயிருந்தவாறு உரத்து அழுது ஒன்றாகச் சோகக்குரலை வெளிப்படுத்தி தமது மனக்கிடக்கையை வெளிப்படுத்தினர்.

காணாமற்போன தமது உறவுகளை தேடிக் கண்டுபிடித்து ஒப்படையுங்கள் என அவர்கள் ஒன்றாக எழுப்பிய குரல் அம்மையாரை கண்கலங்க வைத்தது.

தம்மால் இயன்றதை செய்வதாக தெரிவித்து கண்ணீர் மல்கியவாறு அவர்களிடம் இருந்து விடைபெற்றார் அம்மையார்.

(அ-1)

## மட்டு.சித்தாண்டியில் இளைஞர் மீது சூடு!

மட்டக்களப்பு, சித்தாண்டியிலுள்ள முருகன் கோயிலுக்கு முன்னால் நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாத ஆயுததாரிகள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் தமிழ் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

விஸ்வநாத் உதயராஜ் (வயது - 25) என்ற இளைஞனே படுகாயமடைந்தவராவார்.

இந்த இளைஞன் தனது வீட்டிலிருந்த சமயம் மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் சுட்டுவிட்டு தப்பிச் சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.



## வெலிக்கடைச் சிறைக்கைதிகளின் உண்ணாவிரதம் தொடர்கின்றது!

### 42 பேர் மயக்கம்; நால்வர் கவலைக்கிடம்

கொழும்பு, ஒக்.13

வெலிக்கடைச் சிறைச்சாலையில் தொடர்ச்சியாக உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் 86 தமிழ் அரசியல் கைதிகள் நேற்றும் 3 ஆவது நாளாக போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த 86 பேரில் 42 பேர் எழுந்து நடக்க முடியாத நிலையில் மயக்கமடைந்திருப்பதாகவும், இவர்களில் 4 பேரின் நிலைமை கவலைக்கிடமான முறையில் காணப்படுவதாகவும் சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பாதிக்கப்பட்டிருந்த 42 பேரில் 15 பேர் கண்வருத்தத்திற்கும், 7 பேர் கடும் காய்ச்சலுக்கும் உள்ளாகியிருக்கின்றனர். இவர்களில் நடராஜா நவநீதன் (வயது - 19) என்ற இளைஞன் கண்வருத்தத்தால் முற்றாகப்பாதிப்படைந்து கண்கள் திறக்க முடியாத நிலையில் காணப்படுகின்றார் என்று தெரிவிக்கப்படுகிறது. ஏனைய பலர் வாய் திறந்து கதைக்க முடியாத நிலையில் காணப்படுகின்றனர் என்றும் கூறப்பட்டது.

(சி)

## வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு ஆர்பரின் விஜயத்திற்கு ஏற்பாடு

### கைதிகள் உண்ணாவிரதம் வெற்றி

கொழும்பு, ஒக். 13

வெலிக்கடைச் சிறைச்சாலையில் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கும் தமிழ் அரசியல் கைதிகளை ஐ.நாவின் மனித உரிமைகளுக்கான லூயிஸ் ஆர்பர் அம்மையார் இன்று சந்திப்பதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று நீதி அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்திருக்கிறார்.

இலங்கைக்கான விஜயத்தினை மேற்கொண்டிருக்கும் ஐ.நாவின் மனித உரிமைகளுக்கான ஆணையாளர் லூயிஸ் ஆர்பர் அம்மையார் தம்மைச் சந்திக்க வேண்டும் என்று கோரி வெலிக்கடை மற்றும் அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகள் கடந்த மூன்று தினங்களாக உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர்.

கைதிகள் லூயிஸ் ஆர்பர் அம்மையாரைச் சந்திக்க வேண்டும் என்று கடுமையாக வலியுறுத்தி வருகின்றமையை அடுத்தே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் -

லூயிஸ் ஆர்பர் அம்மையாரின் நிகழ்ச்சிநிரலில் இருந்த சிக்கல் காரணமாகவே அவரைச்சிறைச்சாலைக்கு அழைத்துச்செல்ல முடியாமல் இருந்தது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

(சி)

## குடாநாட்டில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேசினர். அப்போதே இக்கோரிக்கை விடுக்கப்பட்டது.

யாழ். பல்கலைக்கழக பதில் துணைவேந்தர் பேராசிரியர் இ. குமாரவடிவேல், சட்டத்தரணிகள் சங்கத் தலைவரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான சாந்தா அபிமன்னசிங்கம், அரச சார்பற்ற அமைப்புக்களின் இணையப் பிரதிநிதி பேராசிரியர் வி.கே. கணேசலிங்கம் மற்றும் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியப் பிரதிநிதி உட்பட மனித உரிமைகள் அமைப்புக்களின் பிரதிநிதிகள் கொண்ட குழு ஆர்பர் அம்மையாரை நேற்றுச் சந்தித்தது.

பிரசைகள் பிரமுகர்கள் ஆர்பர் அம்மையாரிடம் வலியுறுத்திய ஏனைய விடயங்கள் வருமாறு:

* குடாநாட்டில் கடத்தல்கள், கொலைகள், காணாமற் போதல், கைதுகள் போன்ற மனித உரிமை மீறல் சம்பங்கள் அதிகரித்துள்ளன. இவற்றைக் கட்டுப்படுத்த ஐ.நா. தனது பூரண பங்களிப்பை வழங்க வேண்டும்.
* வெலிக்கடைச் சிறைச்சாலையில் அவலப்படும் தமிழ்க் கைதிகளுக்கு ஐ.நா. உதவ முன்வரவேண்டும். அவர்கள் மீதான வழக்குகள் விசாரிக்கப்பட்டு அவர்கள் விடுவிக்கப்பட வேண்டும், அல்லது அவர்களுக்குத் தண்டனை வழங்கவேண்டும்.
* பத்து வயதுச் சிறுவர்களும் அடையாள அட்டை பெறவேண்டும் என்ற நடைமுறை சிறுவர்களின் மனித உரிமைகளை மீறும் செயலாகும். ஐ.நா. இது தொடர்பாக மிகுந்த கவனத்தில் எடுக்கவேண்டும்.

குடாநாட்டு மக்களின் சுதந்திரமான செயற்பாடுகள் தடுக்கப்பட்டு, அவர்கள் திறந்த வெளிச்சிறைக்குள் வாழும் நிலையில் உருவாக்கப்பட்டுள்ளனர். மக்கள்இந்த அடக்குமுறையில் இருந்து விடுபட ஐ.நா போதிய அக்கறையுடன் உதவவேண்டும்.

பிரசைகள் பிரமுகர்களினால் முன்வைக்கப்பட்ட விடங்களை ஆழமாகக் கவனத் தில் எடுப்பதாக ஆர்பர் அம்மையார் பதில் அளித்தார்.

இச்சந்திப்பை அடுத்து ஆயர் இல்லத்தில் வைத்துப் பிற்பகல் 3 மணி யளவில் யாழ்ப்பாணத்தில் இயங்கும் ஐ.நா. அமைப்புக்களின் பிரதிநிதிகளை சந்தித்து ஐ.நா. ஆணையாளர் கலந்துரையாடினார்.

குடாநாட்டின் களநிலைமைகள், மற் றும் ஐ.நா. அமைப்புக்கள் மேற்கொண்டு வரும் பணிகள்குறித்துஅவர் கேட்டறிந்தார்.

(அ-1)

## நேரில் செய்தி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சோதனைக் கெடுபிடிகள் காரணமாக பத் திரிகையாளர்கள் தமது ஊடக உபகரணங் களை எடுத்துச் செல்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர்.

ஒரு சந்தர்ப்பத்தில் புகைப்படப்பிடிப்பா ளர் ஒருவரின் 'கமரா' சோதனை செய்யப் பட்டு, அதில் இருந்த படங்கள் அழிக்கப்பட்ட பின்னர் மீள ஒப்படைக்கப்பட்டது.

(அ-1-111)

## பத்துமணி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்கு பாதுகாப்புப் பணியில் ஈடுப்பட்ட படையினர் அந்தப் பகுதியில் கூடுவதற்கு அனுமதிக்கவில்லை.

ஐ.நா. ஆணையாளர் ஒரு சிலரை மட் டுமே சந்திப்பதாக தகவல் தெரிவிக்கப்பட் டுள்ளதாகவும் ஏனையோர் இவ்விடத்தில் இருந்து அகன்று செல்லவேண்டும் என்று தெரிவித்த படையினர் மக்களை விரட்டினர்.

மக்கள் எப்படியாவது ஐ.நா. அதிகாரியைச் சந்தித்து மனக்கிடக்கையை வெளிப்படுத்த வேண்டும் என்று கருதி, அவ்விடத்தில் இருந்து அகன்று செல்லமறுத்தனர்.

வேறு இடங்களுக்கு செல்லுமாறு படையினர் மிரட்டியதன் பின்னர் அவர்கள் பிரிந்து சென்றனர்.

ஒரு பகுதியினர் யு.என்.எச்.சி.ஆர் விடு திக்கு அருகில் உள்ள வீதியில் சென்று காத்திருந்தனர். மற்றொரு தொகுதியினர் கைலாசபிள்ளையார் கோயிலுக்கு முன்பாகவும் நல்லூர் கந்தசுவாமி கோயில் வீதியிலும் காத்துநின்றனர்.

ஐ.நா. அதிகாரியிடம் கையளிப்பதற்காக அவர்கள் எடுத்துவந்த மனுக்களை யு.என்.எச்.சி.ஆர். அலுவலகர்களிடம் கையளித்து விட்டே அம்மையாரின் வரவுக்காக, அவரை நேரில் சந்தித்து தமது பாதிப்பைத் தெரிவித்து நீதிகேட்கக் காத்திருந்தனர்.

ஆயர் இல்லத்தில் நடந்த சந்திப்புக்களை முடித்துக்கொண்டு கொழும்பு திரும்பும் வழியில் கோயில் வீதியால் அகதிகளுக் கான ஐ.நா. தூதரக அலுவலகத்துக்கு வந்த ஐ.நா. அதிகாரி ஆர்பர், பாதிக்கப்பட்ட மக்களால் கையளிக்கப்பட்ட மனுக்களைப் பெற்றுக்கொண்டு சென்றுவிட்டார். ஐ.நா. தூதரக அலுவலகத்தின் பக்கத்து ஒழுங்கையில் கூட்டம் கூட்டமாக அமர்ந்திருந்த மக்கள் அவரைச் சந்திக்க அங்கு செல்வதற்கு முன்னரே அவரது வாகனம் புறப்பட்டுவிட்டது.

(அ-1-111)

## முன்னரங்க....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த மோதல் வெடித்தது என்று படைத்தரப் பினர் கூறியுள்ளனர்.

மோதலின்போது மூன்று விடுதலைப் புலி உறுப்பினர்கள் உயிரிழந்திருக்கலாம் என்றும் மேலும் அறிவிக்கப்பட்டது.

இதேவேளை மன்னார், திருக்கேதீஸ் வரம் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதல் ஒன்றிலும் விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்றும் தேசிய பாதுகாப்பு ஊடக நிலையம் தெரிவித்திருக்கிறது.

இந்த மோதல் சம்பவங்கள் தொடர்பாக விடுதலைப்புலிகள் தரப்பிலிருந்து எதுவித தகவலும் வெளிவரவில்லை.

(சி)

## மனித உரிமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குமார், எஸ். ஜெயசேகரம் மற்றும் எஸ். ராஜ ராம், எஸ். தவரத்தினம், எஸ். பூரணச்சந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

குழுவினர் ஆணையாளரின் கவனத்துக் குக் கொண்டுவந்த விடயங்கள் வருமாறு:

* தற்போதைய துன்பியல் நிகழ்வு களுக்கு முடிவுகான, சமாதானத்தையும் அமைதியையும் கொண்டு வருவதற்கு அரசாங்கத்துக்கும் ஏனைய சகல தரப்புக்களுக்கும் ஐ.நா. அழுத்தம் கொடுக்க வேண்டும்.
* உயிர் அச்சுறுத்தலால் சரண் அடை வோரை தங்க வைத்துப்பராமரிக்க தனி யான இடம் ஒன்று ஏற்படுத்தப்படவேண் டும்.

### உயர் அதிகாரி எவரும் இங்கு வருவதில்லை

* யாழ்ப்பாணத்தில் மனித உரிமை கள் ஆணைக்குழு பெயரளவில்தான் செயற்படுகின்றது. முழுமையாகச் செயற்படுவதாக இல்லை. பெரிய அளவில் மனித உரிமை மீறல் சம்பங்கள் இடம் பெற்ற போதிலும் அவற்றை அறிவதற்குத் தலைமையகத்தில் இருந்து உயர் அதிகாரி எவரும் இங்கு வருவதில்லை.

கோரிக்கைகளுக்கு பதிலளித்த ஆர்பர் அம்மையார் தெரிவித்ததாவது:

இலங்கையில் ஐ.நா. கண்காணிப்பகம் அமைக்க ஆவலாக இருக்கிறோம். இலங்கை அரசு அழைப்பு விடுத்தால் மட்டுமே கண் காணிப்பகத்தை அமைக்கமுடியும். தற்போது வெளியில் இருந்து இங்குள்ள நிலைமையை அவதானித்துக்கொண்டிருக்கிறோம். அரசு அழைப்பு விடுத்தால், யாழ்ப்பாணத்திலேயே கண்காணிப்பகத்தை அமைக்கலாம் - என்று தெரிவித்தார்.

(1-111)


HOT IN OUR STALL

| | |
|---|---|
| Laser Pointer | Laptop Scanner |
| HDD Cooler Systems | 3 in 1 HeadPhone |
| Stearing Wheel | Joystick F16 |
| Mouse Pen | Internet Phone |

Norton Antivirus Original Pack

Brand New Intel Systems with Monitor

| | | |
|---|---|---|
| Complete Intel 3.0 Multimedia System for just 44,900/- only | Complete Intel Dual Core 3.0 System for just 54,900/- only | Complete Intel Core 2 Duo System for just 61,900/- only |

Purchase one and get another one FREE

In Our EXHIBITION Stall

At Manipay Ladies College

UNIT மனோகரா தியேட்டர் சந்தி 347, K.K.S Road, Jaffna ✆4590720,0773134737

PERSONAL Classes
342, Stanly Rd, Jaffna.
தமிழ்
A/L 2008
திரு.K.தர்மராஜா
(12-1pm)
BA-Final
2-3pm இன்று
ஆரம்பம்.13.10.2007

A/L 2008, 2009
2008 Day- CLASS
வர்த்தக பிரிவுகள்
Acc. - வின்சன்
Eco. - ஞானேஸ்
B.St.- சந்திநாதன்
ஆரம்பம் 14.10.2007
ஞாயிறு 4 pm
1St in Com,
B.Com part, I, II, III
AAT
ஆரம்பம். 14.10.2007 4.30 pm
ஐடியல்
ஆஸ்பத்திரி வீதி, மானிப்பாய்.

அரசறிவியல்
A/L 2008 தரித பீட்டல், வினாவிடை, M.C.Q 1997-2007 - பகுதி I, II ஒப்பீட்டு அரசியல், இலங்கை அரசியல் புத்தகங்கள்,
ஆசிரியர் By.T. திருமுருகன்.
ஆரம்பம் 14.10.2007 ஞாயிறு நேர அட்டவணையை அலுவலகத்தில் பெறவும்.
திகழ் கல்வி நிறுவனம் - இணுவில்
ஐடியல் ஆஸ்பத்திரி வீதி-மானிப்பாய்
வினைல்ஸ் K.K.S வீதி - சுன்னாகம்

சர்வதேச லயன்ஸ் கழக இலங்கைக் கிளையின் (306)
பொன்விழா நிகழ்வு காலம்: 28.10.2007; நேரம்: காலை 10 மணி; இடம் : யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபம்.
பிரதமவிருந்தினர்:- ஆளுனர் மேதகு லயன் செ.ராகவன் MJF,JP அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.
"சேவை தெய்வீகமானது"  (சி-53382)  SERVICE IS DIVINE


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12.10.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.